
Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

# தமிழ் Mirror



**எமது வாசகர்கள் அனைவருக்கும்**
**இனிய தீப திருநாள் வாழ்த்துக்கள்**

THURSDAY, OCTOBER 31, 2024

வியாழக்கிழமை, 31 ஒக்டோபர் 2024 | ஒளி: 10 கதிர்: 083 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

# "வீடே வெல்லும்"



வீ.ரி.சகாதேவராஜா

வீட்டுச்சின்னத்தை வீணடிப்பதற்கு பல வேற்றுச் சின்னங்கள் தலைப்பட்டிருக்கின்றன. எத்தனை சின்னங்கள் வந்தாலும் வீடே வெல்லும் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட வேட்பாளர் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் சூளுரைத்தார்.

நாவிதன்வெளி வீரச்சோலை மக்கள் அளித்த வரவேற்பு நிகழ்வில் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வீரச்சோலை ஆலய முன்னாள் தலைவர் முருகேசபிள்ளை சோமசுந்தரம் தலைமையில் ஆலய குருக்களின் முன்னிலையில் இவ் வரவேற்பு நிகழ்வு புதன்கிழமை (30) இடம்பெற்றது.

தொடர்ச்சி P2





# தீபாவளி வாழ்த்துகள்

இன்று (31) தீபாவளியை கொண்டாடிக்கொண்டிருக்கும் இலங்கைவாழ் மக்கள் அனைவருக்கும், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோரும், ஏனைய கட்சிகளின் தலைவர்களும் தத்தமது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர். இந்நிலையில், தீபாவளியை கொண்டாடும் இலங்கைவாழ் மக்கள் மட்டுமன்றி உலகவாழ் மக்களுக்கு தமிழ்மிரர் சார்பிலும் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

(செய்திகள் P2, P7)



### தீபாவளி கைவரிசை

## ஹட்டனில் 4 யுவதிகள் கைது

■ *ரஞ்சித் ராஜபக்ஷ*

தீபாவளி பண்டிகையை கொண்டாடுவதற்காக, நாட்டின் பல பாகங்களில் இருந்தும் ஹட்டனுக்கு வருகை தந்த வாடிக்கையாளர்கள், நுகர்வோர்களிடம் இருந்து பணப்பைகள் மற்றும் தங்க நகைகளை திருடிய நான்கு யுவதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். தொடர்ச்சி P2



## "என் மீது சேற்றை வாரி வீசுகின்றனர்"

ஐக்கிய மக்கள் சக்தி (SJB) கொழும்பு மாவட்ட வேட்பாளர் ஹிருணிகா பிரேமச்சந்திர, தனது சொந்த முகாமில் உள்ள சில உறுப்பினர்கள் தமக்கு பிரச்சினைகளை உருவாக்குகின்றனர் எனத் தெரிவித்துள்ளார். அண்மையில் எமது கட்சியில் இணைந்த எனது சொந்த அரசியல் முகாமைச் சேர்ந்த சிலர் எனக்கு பிரச்சினைகளை உருவாக்கி என் மீது சேற்றை வாரி வீசுகின்றனர் என ஊடகங்களுக்கு ஹிருணிகா தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

## பிரதமருக்கு பொப்பி மலர்

இலங்கை ஓய்வுப்பெற்ற படைவீரர்கள் சங்கம் வருடாந்தம் ஏற்பாடு செய்யும் ஆயுதப் படை வீரர்களை நினைவுகூரும் பொப்பி மலர் தினத்தை முன்னிட்டு பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரியவுக்கு பொப்பி மலர் அணிவிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2



### 3 மாகாணங்களில் தமிழ் பாடசாலைகளுக்கு

## வெள்ளி விடுமுறை: சனியன்று பாடசாலை

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஊவா, மத்திய மற்றும் சப்ரகமுவ ஆகிய மூன்று மாகாணங்களிலும் உள்ள தமிழ்மொழிமூலமான பாடசாலைகளுக்கு விசேட விடுமுறை வழங்க பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சி P2



## ரஞ்சனுக்கு எதிரான மனு விசாரணையின்றி தள்ளுபடி

2024 பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக, நடிகரும் அரசியல்வாதியுமான ரஞ்சன் ராமநாயக்க சமர்ப்பித்த தேர்தல் வேட்புமனுவை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மனுவை விசாரணையின்றி தள்ளுபடி செய்து, உயர் நீதிமன்றம் புதன்கிழமை (30) உத்தரவிட்டுள்ளது. தொடர்ச்சி P2

## "தேசத்தை கட்டியெழுப்ப அனுபவமுள்ளவர்கள் அவசியம்"

### ரணில் தெரிவிப்பு: பிரதமர் ஹரினியிடமும் கேள்வி



பிரதமர் ஹரினி அமரசூரியவுக்கு இலங்கையின் அரசியலமைப்பு தெரியாதா என கேள்வி எழுப்பிய முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தீர்மானங்களை எடுப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் அரச அதிகாரிகளின் அனுமதி தேவையில்லை என சுட்டிக்காட்டியுள்ளார்.

நிகழ்வொன்றில் உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி, தொடர்ச்சி P2

## பன்றி இறைச்சி இருந்தால் சட்டம் பாயும்

பன்றிகள் மத்தியில் ஆபிரிக்க பன்றிக் காய்ச்சல் (ASF) வேகமாகப் பரவி வருவதைக் கருத்தில் கொண்டு, இலங்கையில் பன்றிகளை அறுப்பது, பன்றி இறைச்சி மற்றும் பன்றி இறைச்சி பொருட்களை விற்பனை செய்வது அல்லது விநியோகிப்பது தற்காலிகமாக தடை செய்யப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளையும் "தொற்று" அல்லது "சந்தேகத்திற்குரிய"

தொடர்ச்சி P2

## "ஜனாதிபதியின் வாக்குறுதிகள் புஸ்வாணமாகி விட்டன"

தற்போதைய ஜனாதிபதி ஜனாதிபதி தேர்தலின் போது வழங்கிய எதிர்பார்ப்புகளை நிறைவேற்றத் தவறிவிட்டார். வற், நேரடி மற்றும் மறைமுக வரிகளைப் குறைப்போம் என்றார், ஆனால் சர்வதேச நாணய நிதியனத்தின் பேச்சுவார்த்தைகள் கூட தோல்வியடைந்து வரிகளை குறைக்க முடியாதுபோயுள்ளன என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# “வாழ்க்கை தரத்தை உயர்த்துவதை உறுதி செய்வோம்”

தீபாவளி அனைவரது வாழ்க்கையிலும் ஒளியையும், மகிழ்ச்சியையும், புதுப்பித்தலையும் தரட்டும். “வாழ்க்கை தரத்தை உயர்த்துவதை உறுதி செய்வோம்” என்று பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய தனது தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இந்த விழாவின் ஒளி நம் இல்லங்களை ஒளிரச் செய்வது மட்டுமல்லாமல், நீதி, கருணை மற்றும் ஒற்றுமை ஆகியவற்றின் ஆழமான உணர்வை நம் இதயங்களில் ஒளிர வைக்கட்டும். இருளின் மீது ஒளியின் வெற்றியைக் கொண்டாடும் நாம், கட்டமைப்பு ரீதியான பாரபட்சங்கள் மற்றும் விளிம்பு நிலைக்குள்ளாக்கப்படல் என்பவற்றுக்கு எதிராகப் போராடுபவர்களின் தொடர்ச்சியான போராட்டங்களை நினைவுபடுத்திக்கொள்வோம்.

அனைவரும் சுதந்திரம், கண்ணியம் மற்றும் உரித்தை அனுபவிக்கக்கூடிய ஒரு உலகைக்கட்டியெழுப்ப நாம் மறுபரிசீலனை செய்யவேண்டிய நேரம் இது.

‘வளமானதேசம் -அழகானவாழ்க்கை’ என்ற எமது அரசியல் கொள்கையின் மூலம் எங்கள் கூட்டு இலக்கானது அனைவரின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதும், அனைவரையும் உள்ளடக்குவதை உறுதிசெய்வதும் ஆகும்.

இந்த தீபாவளி அனைவரது வாழ்க்கையிலும் ஒளியையும், மகிழ்ச்சியையும், புதுப்பித்தலையும் தரட்டும். இன்று தீபாவளிகொண்டாடும் அனைவருக்கும் மகிழ்ச்சியான, அர்த்தமுள்ள, அமைதியான தீபாவளிவாழ்த்துக்கள் என்று தெரிவித்துள்ளார்.



# “ஞானத்தின் ஒளியால் உலகமே ஒளிமயமாகட்டும்”

உலகெங்கிலும் உள்ள இந்து மக்களின் இதயங்களை ஒளிமயமாக்கும் தீபாவளி திருநாளை முன்னிட்டு, இலங்கை மற்றும் உலகெங்கிலும் வாழும் இந்து மக்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச, அனுப்பிவைத்துள்ள தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

பெரும் இருளை ஒரு சிறு விளக்கொளியால் அகற்ற முடியும். அதற்குத் தேவையானது சரியான பார்வையும் வழிகாட்டுதலும் மட்டுமே. அறியாமை இருளை அகற்றி ஞானத்தின் ஒளியால் உலகை ஒளிமயமாக்கும் தீபாவளி பண்டிகை நமக்கு உணர்த்துவதும் இதுவேதான்.

ஒரு நாடாக இந்த தருணத்தில் நமக்கு பல சவால்கள் உள்ளன. இந்த சவால்கள் அனைத்தையும் வெற்றி கொள்ள முடிவது இனம், மதம், சாதி, குலம், கோத்திர வேறுபாடுகளின்றி அனைவரும் கைகோர்த்தால் மட்டுமே. அவ்வாறு அனைவரும் கைகோர்க்க இன்று ஏற்றும் ஒரு விளக்கொளி வழிவகுக்கட்டும். அன்பு, கருணை, ஒற்றுமை, நல்லிணக்கம் ஆகிய அனைத்து உணர்வுகளையும் ஒளிரச் செய்து, ஒருவருக்கொருவர் வெறுப்புக்குப் பதிலாக சகோதரத்துவத்தை பரப்பும் தீபாவளி விளக்கொளியால் உலக மக்கள் அனைவரும் மகிழ்ச்சி அடையட்டும் என பிரார்த்திக்கிறேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.



# “ஆரோக்கியம், மகிழ்ச்சி நிரம்பியதாக மலரட்டும்”

“தீப ஒளியில் இருள் விலகுவது போல், உங்கள் வாழ் விலும் துன்பம் விலகி இன்பம் நிலைத்திருக்கட்டும். அத்துடன், எமது மலையக மண்ணின் மறுமலர்ச்சிக்காகவும் ஒன்றுபடுவோம் என்று இந்த உன்னதமான நாளில் அழைப்பு விடுக்கின்றேன்” என, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் தனது தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்தார்.

உங்கள் வாழ்க்கையில் ஒவ்வொரு தருணமும் வெற்றி, ஆரோக்கியம், மகிழ்ச்சி நிரம்பியதாக மலரட்டும். இந்த தீபாவளி பண்டிகை உங்கள் வாழ்வில் புதுமையான ஒளிகளால் நிரம்பி மகிழ்ச்சி கொண்டாடுவதை உறுதியாக்கட்டும் என வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது..

எமது நாட்டை சூழ்ந்துள்ள இருள் அகன்று, நாட்டுக்கும் மக்களுக்கும் ஒளிமயமான எதிர்காலம் பிறக்க நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டிய தருணம் இதுவாகும்.

ஒற்றுமை, ஐக்கியம் என்பவற்றின் முக்கியத்துவத்தையும் தீபாவளிப் பண்டிகை உணர்த்துகின்றது. ஆகவே, எமது மலையக மண்ணின் மறுமலர்ச்சிக்காகவும் ஒன்றுபடுவோம் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும், எதைச் செய்தாலும், பாதுகாப்பு மிகமுக்கியமானதென்பதுடன், மிகவும் பாதுகாப்பான முறையில் தீபாவளிப் பண்டிகையை கொண்டாடுவோம். இல்லாதவர்களுக்கு தம்மிடம் உள்ளதை கொடுத்து, அவர்களை மகிழ்விப்போம். நாடெங்கும் அன்பும் அமைதியும் தழைக்கட்டும். வேற்றுமை அகன்று, ஒற்றுமை ஓங்கட்டும்.

மகிழ்ச்சியான இந்த நாளில் அனைவரது வாழ்விலும் வளமும் நலமும் பெருகட்டும் என்று இறைவனை வேண்டி, அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை தீபாவளி நல்வாழ்த்தை தெரிவித்துக்கொள்கின்றேன்” எனத் தெரிவித்தார்.



# “வீடே வெல்லும்”

மேலும் அங்கு அவர் உரையாற்றிய போது.


எமக்காக நான், எனக்காக நான் இல்லை. இனத்துக்காகவே செயல்படுகிறேன் ,எனது வெற்றி உங்களது வெற்றி. அம்பாறை மாவட்டம் மறுமலர்ச்சி பெற வாக்களியுங்கள் . உங்களை பாதுகாப்பது உங்களுடைய வாக்குப்பலம். எங்களுடைய ஆயுதம் உங்களுடைய வாக்கு. கூடிய வாக்குகள் கிடைக்கப் பெறுகின்ற போது அம்பாறை மாவட்டத்திற்கு சவாலாக திகழ்கின்ற விடயங்களை சவாலாக எதிர்கொண்டு அனைத்து விடயங்களிலும் வெல்ல முடியும்.

வீரச்சோலை போன்ற பின்தங்கிய பிரதேசங்களை எழுச்சிப் பாதைக்கு கொண்டு வர முடியும் .அபிவிருத்தியுடன் கூடிய உரிமையையும் பெற்று தருவேன் என்றார்.

ஆலய முன்னாள் தலைவர் முருகேசபிள்ளை சோமசுந்தரம் பேசுகையில்..

இலங்கை தமிழரசுக் கட்சியினுடைய வெற்றி வேட்பாளர் ஜெயசிறிலை ஆதரித்து இங்கு ஆலயத்தில் நடைபெறும் கலந்துரையாடல் நிச்சயமாக அவர் வெற்றி பெறுவார் என்பதை கட்டியம் கூறுகிறது.

அம்பாறை மாவட்டத்திற்கு காவலனாக வர இருக்கின்ற பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை பெறக்கூடிய எமது ஏழைகளின் தோழன் அம்பாறை மாவட்ட மண்ணின் மைந்தன் ஜெயசிறில் அவர்களை நாங்கள் பெருமளவான வாக்குகளைச் செலுத்தி வெல்ல வைப்போம் . வீரச்சோலைக்கு அவர் தேர்தலைப் பிரச்சாரத்திற்கு மாத்திரம் வருபவர் அல்ல . ஏனைய ஆன்மீக சமூகப் பணிக்கும் கல்விக்கும் பல உதவிகளை கடந்த காலங்களில் செய்தவர். கொரோனா காலகட்டத்தில் உதவிய ஒரே மனிதர் இவர் தான். அவருக்கு பாராளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைக்க வேண்டும். அதற்காக நாங்கள் எங்களது கிராமம் முற்று முழுதாக ஒத்துழைத்து அவரை வெற்றி வாகை சூடுவதற்கு செயல்படுவோம் என்றார்.



# ஹட்டனில் 4 யுவதிகள்...

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஹட்டன் நகருக்கு வரும் வாடிக்கையாளர்களின் பணப்பைகள் மற்றும் தங்க ஆபரணங்களை திருடும் ஒழுங்கமைக்கப்பட்ட குழுவொன்றின் நான்கு யுவதிகள் செவ்வாய்க்கிழமை (29) பிற்பகல் ஹட்டன் பொலிஸ் குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஹட்டன் நகருக்கு அதிகளவான வாடிக்கையாளர்கள் வருகை தந்திருந்த நிலையில், சில வாடிக்கையாளர்களின் பணப்பைகள் மற்றும் தங்க ஆபரணங்கள் காணாமல் போனதாக ஹட்டன் பொலிஸாருக்கு பல முறைப்பாடுகள் கிடைத்திருந்தன.

இது தொடர்பில் அவதானம் செலுத்திய ஹட்டன் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஹட்டன் நகருக்கு வரும் வாடிக்கையாளர்களின் பாதுகாப்பை பலப்படுத்தும் வகையில் விசேட பாதுகாப்பு வேலைத்திட்டத்தை முன்னெடுத்திருந்ததுடன், அதன் ஊடாக சிவில் உடையில் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் குறித்த இடத்தில் கடமையில் ஈடுபட்ட போது சந்தேகத்தின் பேரில் வாடிக்கையாளரின் கழுத்தில் நகையை உடைக்க முற்பட்ட பெண்ணை கைதுசெய்துள்ளதுடன் ஏனைய சந்தேக நபர்களையும் கைதுசெய்துள்ளனர்.

நான்கு யுவதிகளையும் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்ட போது சந்தேகநபர்கள் வசம் இரண்டு இலட்சத்து ஐம்பத்தைந்தாயிரம் ரூபாய் பணமும் சில தங்க ஆபரணங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 21-26 வயதுடையவர்கள் எனவும், இவர்கள் வென்னப்புவ மற்றும் கொழும்பு பிரதேசத்தில் வசிப்பவர்கள் எனவும், சந்தேகநபர்கள்.

# “என் மீது சேற்றை வாரி வீசுகின்றனர்”

இந்த நபர்களைப் பற்றி கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாச அறிந்திருப்பதாகவும், விரைவில் கட்சியை சரியான பாதையில் கொண்டு செல்வார் என்றும் நான் நம்புகிறேன். அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தி, எதிர்காலத்தில் மறுசீரமைக்கப்படும் என்றார்.

# வெள்ளி விடுமுறை: சனியன்று பாடசாலை

தீபாவளி பண்டிகை வியாழக்கிழமை (31) கொண்டாடப்படுகின்றது. இந்நிலையில், தீபாவளி தினத்துக்கு மறுநாள் (வெள்ளிக்கிழமை) தமிழ் மாணவர்களுக்கு பாடசாலைக்கு வருவதில் சிரமம் என்பதால் வெள்ளிக்கிழமை விடுமுறை வழங்குமாறு அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் மாகாண ஆளுநர்கள் பணிப்புரை விடுத்துள்ளனர்.

இதன்படி, 01.11.2024 அன்று தமிழ் பாடசாலைகளுக்கு விடுமுறை அளிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்படுவதாகவும், அன்றைய கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 09.11.2024 அன்று நடத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# “தேசத்தை கட்டியெழுப்ப அனுபவமுள்ளவர்கள் அவசியம்”

அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கான அமைச்சரவையின் தீர்மானம் தொடர்பில் பிரதமர் அமரசூரிய அண்மையில் வெளியிட்ட அறிக்கை தொடர்பில் கேள்வி எழுப்பினார்.

அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு திறைசேரி மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகளின் அனுமதி பெறப்படவில்லை என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். அமைச்சரவை செயல்படுவதற்கு அதிகாரிகளின் ஒப்புதல் முக்கியம் என்கிறார்.

இதற்கு பதிலளிக்கும் வகையில் கருத்துரைத்த முன்னாள் ஜனாதிபதி ரணில், அமைச்சரவையே தேசத்தை நிர்வகிப்பதாகவும், அரசியலமைப்பில் எந்த இடத்திலும் அதிகாரிகளுக்கு முன்னுரிமை என்று குறிப்பிடவில்லை. ஆகையால், அரசியலமைப்பை எங்கிருந்து கற்றுக்கொண்டீர்கள்? என்று ரணில் கேள்வி எழுப்பினார்.

“நீங்கள் அரசியலமைப்பைப் பற்றி தெரிந்து கொள்ள விரும்பினால் எனக்குத் தெரியப்படுத்துங்கள், நான் உங்களுக்கு உதவுவேன், இல்லையெனில் நான் நமது முன்னாள் பிரதமரிடம் சொல்கிறேன்” என்று ரணில் மேலும் கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி செயலாளர் உதய செனவிரத்ன, வரவு- செலவுத் திட்ட அலுவலகத்தின் பணிப்பாளர் ஜூட் நிலுக்ஷன், ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் எஸ்.

# ரஞ்சனுக்கு எதிரான மனு விசாரணையின்றி தள்ளுபடி

பிரதிவாதிகள் முன்வைத்த பூர்வாங்க ஆட்சேபனைகளை கருத்திற்கொண்ட பிரீத்தி பத்மன் சுரசேன, குமுதினி விக்கிரமசிங்க மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு, மனுவை நிராகரித்து உத்தரவு பிறப்பித்தது.

கம்பஹா மாவட்டத்தில் போட்டியிடும் சுயேட்சைக்குழு உறுப்பினர் ஒருவர் ரஞ்சன் ராமநாயக்கவின் வேட்பு மனுவை சவாலுக்கு உட்படுத்தி, உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமைகள் மனுவை கடந்த வாரம் தாக்கல் செய்திருந்தார்.

இதில் ஐக்கிய ஜனநாயக குரல் கட்சி சார்பில் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிடவுள்ள ரஞ்சன் ராமநாயக்கவின் வேட்புமனுவை நிராகரித்து உத்தரவிடுமாறு மனுவில் கோரியுள்ளார்.

ரஞ்சன் ராமநாயக்கவுக்கு வாக்களிக்கவோ அல்லது பாராளுமன்றத்தில் அமர்வதற்கோ உரிமை இல்லை என்ற அடிப்படையில் தீர்ப்பளிக்குமாறு மனுதாரர் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பிரதமருக்கு பொப்பி மலர்

இலங்கை ஓய்வுப்பெற்ற படைவீரர்கள் சங்கத்தின் உப செயலாளர் கொஸ்வத்தவினால் பிரதமர் அலுவலகத்தில் இந்த நிகழ்வு புதன்கிழமை (30) முன்னெடுக்கப்பட்டது.

பொப்பி மலர் விற்பனையில் கிடைக்கப்பெறும் வருமானம் ஓய்வுப்பெற்ற மற்றும் அங்கவீனமடைந்த இராணுவ அதிகாரிகளின் நலன்களுக்கென ஒதுக்கப்படுகிறது. முதலாம் மற்றும் இரண்டாம் உலக யுத்தங்களின் போதும், இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்த மோதல்களின் போதும் உயிரிழந்த இராணுவ வீரர்களை நினைவுகூர்ந்து பொப்பி மலர் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. இலங்கையில் ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதம் 11ஆம் திகதியை அண்மித்த ஞாயிற்றுக்கிழமையில் இந்த நினைவு நாள் அனுஷ்டிக்கப்படுகிறது.

ஓய்வுப்பெற்ற மற்றும் அங்கவீனமடைந்த இராணுவ உறுப்பினர்களின் நலன்களுக்காக பொப்பி மலர் ஒன்றை அணியுமாறு இலங்கை ஓய்வுப்பெற்ற படைவீரர்கள் சங்கத்தின் தலைவர் லெப்டினன் கேர்ணல் அஜித் சியம்பலாப்பிட்டிய இதன்போது நாட்டு மக்கள் அனைவரிடமும் கோரிக்கை விடுத்தார்.

# பன்றி இறைச்சி இருந்தால் சட்டம் பாயும்

பிரதேசங்களாக பிரகடனப்படுத்தி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் இது குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய விதிமுறைகளின்படி, பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குள் பன்றிகள் அல்லது பன்றி இறைச்சி பொருட்களை கொண்டு செல்வது, பன்றிகளை அறுப்பது, பன்றிகளை செயற்கையாக இனப்பெருக்கம் செய்தல், பன்றி இறைச்சி மற்றும் பன்றி இறைச்சி பொருட்களை விற்பனை செய்தல் அல்லது விநியோகித்தல் மற்றும் தொற்றுள்ள பாதிக்கப்பட்ட விலங்குகளின் சடலங்களை நீர்நிலைகளில் அல்லது வழிகளில் அப்புறப்படுத்துதல் ஆகியவை தடை செய்யப்படும்.

# “ஜனாதிபதியின் வாக்குறுதிகள் புஸ்வாணமாகி விட்டன”

ஐக்கிய மக்கள் சக்தி, பொதுத் தேர்தலுக்கு முன்னரே எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாட்டை எட்டியது. எனவே, நேரடி வரி மற்றும் மறைமுக வரிகளை எம்மால் குறைக்க முடியும் என்றும் தெரிவித்தார்.

மத்திய கொழும்பு தேர்தல் தொகுதியில் செவ்வாய்க்கிழமை (29) நடந்த மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

வற் வரி, உழைக்கும் போது செலுத்தும் வரி முதலியவற்றைக் குறைக்க அரசாங்கத்தால் முடியாவிட்டாலும், ஐக்கிய மக்கள் சக்திக்கு இந்த வரிகளை குறைக்கும் இயலுமை காணப்படுகிறது. பாராளுமன்ற அதிகாரம் எமக்கு கிடைக்கும் பட்சத்தில் முன்னாள் ஜனாதிபதியினால் கைச்சாத்திடப்பட்ட மக்கள் விரோத சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டு, மக்கள் சார் உடன்படிக்கையை மேற்கொள்வோம் என்றார்.

2033 ஆம் ஆண்டிலிருந்து கடனை செலுத்த சர்வதேச நாணய நிதியம் இணக்கம் தெரிவித்த போதிலும், கடனை 2028 முதல் அதாவது 4 ஆண்டுகளில் செலுத்துவதற்கான இணக்கப்பாட்டை முன்னாள் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் விருப்பம் தெரிவித்தது. இவ்வளவு மந்தமான, வீழ்ச்சி கண்டுள்ள பொருளாதாரத்தைக் கொண்ட நாடு நான்கு வருடங்களில் கடனை அடைக்க முடியாது. நான்கு வருடங்களில் கடனை அடைப்பதற்கு விரைவான பொருளாதார வளர்ச்சி அவசியம் என சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இப்படியே தொடர்ந்தால், 2028 இன்னும் கடினமாக மாறி இதைவிடவும் வங்குரோத்தடைவோம். வரிச்சுமையைக் குறைக்கும் புதிய சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கையை எட்ட முடியும் என்பதால், அதற்கான சந்தர்ப்பமும் ஏதுவான வேலைத்திட்டமும் எம்மிடம் காணப்படுவதால் பாராளுமன்ற பெரும்பான்மையை ஐக்கிய மக்கள் சக்திக்கு வழங்குமாறு சஜித் பிரேமதாச வேண்டுகோள் விடுத்தார்.

இன்று, வரிசையில் நிற்கும் காலம் மீண்டும் உருவாக்கப்பட்டுள்ளது. பொருட்களின் விலை அதிகரித்து, பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு, தேங்காய்க்கும் கூட தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளன. மக்கள் மத்தியில் அதிருப்தியின் அழுத்தம் அதிகரித்துள்ளது. இந்த பாதையை வெற்றிப் பாதையாக மாற்றியமைக்க ஐக்கிய மக்கள் சக்தி தயாராக இருக்கிறது என்று சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

# காதலியை கடலில் தள்ளிவிட்ட காதலன்

காதலனால் கடலில் தள்ளப்பட்ட காதலியின் தலை பாறையில் மோதி உயிரிழந்துள்ள சம்பவம் புதன்கிழமை (29) பிற்பகல் பயாகல தியலகொட பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

பஹல்கொட, பயாகல பிரதேசத்தை சேர்ந்த 19 வயதுடைய தருஷி செவ்மினி என்ற யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த காதல் ஜோடி பயாகல தியலகொட பிரதேச கடற்கரையில் பேசிக்கொண்டிருக்கும் போது இருவருக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடு எல்லை மீறியதையடுத்து, இளைஞன் தனது காதலியை கடலில் தள்ளிவிட்டுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பயாகல பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.





## ஐயாவின் 25வது சிரார்த்த தினம்...

மலையகத்தின் மாபெருந்தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் ஐயாவின் 25வது சிரார்த்த தினமான புதன்கிழமை (30) அனுஷ்டிக்கப்பட்டது. கொழும்பு, பழைய பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் அமைந்துள்ள ஐயாவின் உருவ சிலைக்கு மலர்மாலை அணிவித்து, மலரஞ்சலி செலுத்தியதன் பின்னர் ஆரம்பமானது.

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவர் செந்தில் தொண்டமான், பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான்,இலங்கை தொழிலாளர் காங்கிரசின் சட்ட ஆலோசகர் மாரிமுத்து, தேசிய அமைப்பாளர் சக்திவேல் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் ஐயாவின் உருவ சிலைக்கு, மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

பின்னர் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைமையகமான சௌமியபவனில் விசேட பூஜை வழிபாடுகளும் இடம்பெற்றன.





## ஐஸுடன் வந்த நால்வர் கைது

**எஸ்.கணேசன்**

தீபாவளியை கொண்டாடுவதற்காக ஐஸ் உள்ளிட்ட போதைப்பொருள்களை எடுத்து வந்த நான்கு இளைஞர்கள் ஹட்டன் பொலிஸாரால் புதன்கிழமை (29) கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹட்டன், டிக்கோயா, சாஞ்சிமலை பகுதியைச் சேர்ந்த 22 மற்றும் 28 வயதுகளுக்கு இடைப்பட்ட நால்வரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பில் தொழில்புரிந்த குறித்த நாலவர் தீபாவளி பண்டிகைக்காக தமது ஊர் பகுதிக்கு வந்துள்ளனர். அவர்களின் நடத்தையில் சந்தேகம் ஏற்பட்டதால் அவர்களை சோதனையிட்ட போது ஐஸ், கஞ்சா மற்றும் போதை மாத்திரைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளது.


மேலும் சந்தேக நபர்களை விசாரணைகளுக்குப் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## 'குடு தேவி' கைது

'குடு தேவி' என்றழைக்கப்படும், 32 வயதான பெண், பேலியகொடை பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

24 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஐஸ் போதைப்பொருளுடன், மேற்படி பெண், பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால், புதன்கிழமை (30) கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த பெண், தற்போது புஸ்ஸ சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரர் கணேமுல்ல சஞ்சீவ மற்றும் தற்போது வெளிநாட்டில் உள்ள போதைப்பொருள் கடத்தல்காரர் கலன நேமட்ட ஆகியோரால் அனுப்பிவைக்கப்படும் போதைப்பொருள்களை, இலங்கையில் விநியோகம் செய்பவர் என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.




## மீன் லொறி விபத்தில் இறால் தொகை மாயம்

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் மீன் லொறியொன்று சீமெந்து லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஏழு இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய இறால் காணாமல் போயுள்ளதாக மீன் லொறியின் சாரதியால் கஹதுடுவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தங்காலை குடாவெல்ல பிரதேசத்தில் வசிக்கும் மீன் வியாபாரியான கே.எச். ஆர்.குமார், நீர்கொழும்பில் இருந்து மீன் ஏற்றிக்கொண்டு தங்காலை நோக்கி பயணித்த போது சீமெந்து லொறியுடன் மோதி விபத்துக்குள்ளான சம்பவம் கடந்த 25 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

விபத்தில் மீன் லொறிக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதுடன் மீன் லொறியின் சாரதி படுகாயமடைந்து வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். எனினும், லொறியில் இருந்த இறால் தொகை லொறிக்குள்ளும் வீதியிலும் சிதறிக் கிடந்திருந்துள்ளது.

சாரதியின் சகோதரனான லொறியின் உரிமையாளர் விபத்து இடம்பெற்ற இடத்திற்கு வந்து பார்த்த போது இரண்டு கிலோகிராம் இறால்கள் மாத்திரம் லொறியில் இருந்ததாகவும் லொறியின் கேபினுக்குள் இருந்த இருபதாயிரம் ரூபாய் பணம் காணாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது..

விபத்தின் போது, லொறியில் 6 இலட்சம் ரூபாய் பெறுமதியான 390 கிலோ கிராம் இறால், மீன்கள் அடங்கிய 20 பெட்டிகள் இருந்ததாகவும் அதன் விற்பனை விலை ஏழு இலட்சம் ரூபாய்க்கு மேல் என மதிப்பிடப்பட்டுள்ளது.



## கற்கோவளத்தில் தம்பதி கொலை

**பு.கஜிந்தன்**

யாழ்ப்பாணம் வடமராட்சி கற்கோவளம், ஐயனார் கோவிலடி பகுதியில் கணவன் மனைவி இருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

குறித்த பிரதேசத்தை சேர்ந்த, சலவைத் தொழிலில் ஈடுபட்டுவரும் 53 வயதுடைய மாணிக்கம் சுப்பிரமணியம் மற்றும் அவரது மனைவியான 54 வயதுடைய மேரி ஆகிய இருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

இரு சடலங்களும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## குழந்தையை காட்டி ஏமாற்றிய இருவர் கைது

**ரஞ்சித் ராஜபக்ஷ**

நொச்சியாகம பிரதேசத்தில் 4 வயது குழந்தைக்கு சத்திரசிகிச்சை செய்வதற்கு ஹட்டன் நகரில் உதவி சேகரித்துக்கொண்டிருந்த இரு இளைஞர்களும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விசாரணையின் போது போலி ஆவணங்களை தயாரித்து உதவிகளை சேகரித்து வந்ததாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.



அத்துடன்,100 ரூபாய் பெறுமதியான டிக்கெட்டுகளும் அவ்விருவரிடமிருந்தும் மீட்கப்பட்டுள்ளது.

## கலஹாவில் கோவில், வீடுகளில் கைவரிசை



**நவி**

கலஹா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கலஹா குரூப் பகுதியில் கோவில் மற்றும் வீடுகளில், புதன்கிழமை (30) கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்துக்குள் நுழைந்துள்ள கொள்ளையர்கள், கோவில் உண்டியலை களவாடியுள்ள கொள்ளையர்கள், ஆலய குருக்களின் வீட்டுக்கும் சென்று, கையடக்க தொலைபேசியையும் மற்றும் வீட்டுக்கு முன்பாக இருந்த மோட்டார் சைக்கிளில் இருந்த பணத்தையும் திருடி கொண்டு சென்றுள்ளனர்.

அத்துடன், இப்பகுதியில் உள்ள மேலும் மூன்று வீடுகளுக்கு சென்று வீட்டில் இருந்த பொருள் மற்றும் பணம் என்பவற்றை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பில் கலஹா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நீதி கோரி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்

**யது பாஸ்கரன்**

காணாமல் ஆக்கப்பட்ட தங்களது உறவுகளுக்கு நீதி கோரி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் அமைந்துள்ள குறித்த அமைப்பின் அலுவலகத்தின் முன்பாக புதன்கிழமை (30) குறித்த ஆர்ப்பாட்டம் மு ன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதில், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், "தங்களுடைய உறவுகளுக்கு நடந்தது என்ன?" "உள்நாட்டுப் பொறிமுறை ஒன்றையோ அல்லது இழப்பீடுகளையும் வழங்குவதையோ



ஏற்கோம்" "இந்த அரசு தொடர்ந்து ஏமாற்றி வருகிறது". "தங்களுக்கு சர்வதேச மட்டத்திலான ஒரு விசாரணை மேற்கொள்ளப்பட்டு தங்களுக்கான நீதியை பெற்றுத் தர வேண்டும்" என கோஷங்களை எழுப்பியுள்ளனர்

# தீமை இருளை நீக்கி; தூய்மை எண்ணங்களை பரவச் செய்வோம்

உலகவாழ் தமிழர்கள், இந்துக்கள், இன்றையதினம், இனிய தீபாவளியை வெகு விமர்சையாக கொண்டாடுகின்றனர். தீபங்களை வரிசைப்படுத்தி வைத்து வழிபாடும் செய்யும் நாளாக இதனை போற்றுகின்றோம். நரகா சுரன் எனும் அசுரனை அழித்த தினத்தையே தீபாவளியாக கொண்டாடுவதாக புராணங்கள் சொல்லுகின்றன. அந்த நரகாசுரனையே, மனதின் தீமைகளோடு ஒப்பீடு செய்கின்றனர்.

இன்றைய தீபாவளியை மிகவும் உற்சாகமாக கொண்டாடுவதற்கான, முன்னேற்பாடுகளை பலரும் கடந்த பல நாட்களில் இருந்தே செய்துகொண்டிருந்தனர். வீடுகளை சுத்தப்படுத்தல், வர்ணங்களை பூசுதல், புத்தாடைகளை கொள்வனவு செய்தல், இனிப்பு பண்டங்களை தயாரித்தல் உள்ளிட்டவற்றை குறிப்பிடலாம். அந்தளவுக்கு இந்த பண்டியை தமிழர்களிடத்தில் விசேடமான பண்டிகையாக கொண்டாப்படுகின்றது.

எனினும், தங்களுடைய பொருளாதார நிலைக்கு ஏற்றவகையில், ஆடம்பரமின்றி, கடனாளி ஆகிவிடாது, மிகவும் எளிமையான முறையில் கொண்டாடும் குடும்பங்களும் இருக்கத்தான் செய்கின்றன. அந்தளவுக்கு அவர்களின் வாழ்க்கையில் பொருளாதார நெருக்கடி விளையாடி விட்டது. விளையாடிக்கொண்டிருக்கிறது.

இலங்கையில் மட்டுமன்றி, இந்தியா, பீஜி தீவு, மலேசியா, மொரீசியஸ், இந்தோனேசியா, நேபாளம், கனடா, இங்கிலாந்து போன்ற நாடுகளில், இந்துக்கள் வாழும் பிரதேசங்களில் வெகு விமர்சையாக இந்த தீபாவளி பண்டியை கொண்டாப்படுகின்றது.

அமெரிக்காவின் வெள்ளைமாளிகையிலும், அந்நாட்டு ஜனாதிபதி ஜோ பைடன், திங்கட்கிழமை (25) தீபாவளி கொண்டாட்டங்களை, குத்துவிளக்கேறி ஆரம்பித்து வைத்தார் என்பதும் சிறப்பம்சங்களில் ஒன்றாகும். ஆக, உலகத்தில் எங்கெல்லாம் இந்துக்கள் வாழ்கின்றனரோ, அங்கெல்லாம், தீபாவளி பண்டிகை வெகு விமர்சையாக கொண்டாடப்படுகின்றது.

நமது நாட்டை பொறுத்தவரையில், புதிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, "வேறுபாடுகளை முழுமையாக இல்லாது செய்ய முன்வருவோம்" எனும் தலைப்பின் கீழ்,நாட்டு மக்களுக்கு தனது தீபாவளி வாழ்த்துக்களை தெரிவித்துகொண்டுள்ளார். "வாழக்கை தரத்தை உயர்த்துவதை உறுதி செய்வோம்" என்று பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரியவும், இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ. "அறியாமை இருளை அகற்றி ஞானத்தின் ஒளியால் உலகமே ஒளிமயமாகட்டும்" என, தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். ஏனைய கட்சிகளின் தலைவர்கள், நலன்விரும்பிகள், மதத்தலைவர்களும் தங்களுடைய வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.

அதாவது, வாழ்க்கையின் இருளை நீக்கி, ஒளியைக் கொடுக்கும் பண்டிகையாக தீபாவளி பண்டிகை கொண்டாடப்படுகிறது. எனினும், புராணங்களில் பல கதைகள் கூறப்பட்டிருக்கின்றன. இராமன் பதினான்கு வருடங்கள் வனவாசம் முடித்து, நாடு திரும்பும் போது மக்கள் விளக்கேற்றி வரவேற்றனர் என்றெல்லாம் கூறப்படுகின்றது.

தீபாவளி தினமான இன்று (ஒக்டோபர் 31) அனைவரும் அதிகாலையில் எழுவர். எண்ணெய்க் குளியல் செய்வர். மக்கள் புத்தாடை உடுத்தியும், இனிப்புக்கள் நிறைய செய்து ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்வர். பரிசுகள் தந்து மகிழ்வர். பெரியோரை வணங்கி வாழ்த்து பெறுவர். தீபஒளித் திருநாளன்று பட்டாசு, மத்தாப்பூ கொளுத்துவது மக்களின் வாடிக்கை ஆகும்.

தீப திருநாளான இன்று (31) வீடுகளில் ஏற்றப்படும் ஒளியைப் போன்று, தங்களுடைய ஒவ்வொருவரின் மனங்களிலும் தீமை இருள் நீக்கி? தூய்மை எண்ணங்களை பரவச் செய்வோம் என வலியுறுத்தும் அதேவேளை, அனைவருக்கும் எமது தமிழ்மிரர் சார்பாகவும் வாழ்த்துகின்றோம்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.


அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



# வாழ்வியல் தரிசனம்

நம்மவர்களில் பலர் நாட்டை விட்டு வெளயேறிஈ, அந்நிய நாடுகளுகளுக்குச் சென்று, அங்கேயே வாழ்வதால், வாழ்க்கையின் நடைமுறைகள், கலாசாரங்கள் மாறிவிடுகின்றன.

சிலர், தமது தாய் மொழியை கொச்சையாகப் பேசி, தாம் குடியேறிய நாடுதான் தமது தாய்நாடு போல தங்களை மாற்றி விடுகின்றார்கள். அவர்களின் பிள்ளைகளும் தமது தாய் மொழியின் வனப்பு, பேச்சின் தன்மை எதுவும் புரியாது, குடியேறிய நாட்டின் மொழியே தமது தாய் மொழி என எண்ணிக் கொள்கின்றார்கள்.

தாய் நாட்டுக்கு வந்தால், பேரன், பேத்தியுடன் தாய்மொழியில் பேச முடியாது போக, பெற்றோர் மொழி பெயர்ப்பாளராக மாறிவிடுகின்றனர்.

தான் குடியேறிய நாட்டுக்கு விசுவாசமாகவும் அந்த நாட்டின் மொழியை கசடறவும் கற்று பேசவும் வேண்டும். அதற்காகத் தாய் மொழியை மறந்து விட வேண்டுமா? தாய் மொழியை ஒருபோதும் மறவாதீர்கள்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# எதிர்பார்ப்புகளில் அள்ளி போடும் மண்

**முருகானந்தம் தவம்**

இலங்கையின் ஜனாதிபதியாக அநுரகுமார திசாநாயக்க பதவியேற்றதை தொடர்ந்து தமிழ் மக்கள் மீதான அரச,பொலிஸ்,இராணுவ ,புலனாய்வு பிரிவுகளின் அட்டகாசங்கள், கெடுபிடிகள், பழிவாங்கல்கள் ,அடக்குமுறைகள் இல்லாதொழியும் என பெரும் எதிர்பார்ப்பு வைத்திருந்த தமிழ்மக்களின் அந்த எதிர்பார்ப்புகளுக்கு மண் அள்ளிப் போடும் வகையிலேயே அடக்குமுறைகள் தொடர்ந்து தமிழர் பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அனுரகுமார ஜனாதிபதியாக பதவியேற்று ஒரு மாதம் மட்டுமே பூர்த்தி அடைந்துள்ள நிலையில் பொலிஸ்,புலனாய்வு பிரிவுகளின் தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகள்,கைதுகள் , அச்சுறுத்தல்கள் முன்னரை விடவும் தீவிரம் பெற்றுள்ளதை வடக்கு,கிழக்குப் பகுதிகளில் நடந்தேறும் சம்பவங்கள் உறுதிப்படுத்தி வருகின்றன. இந்நிலையில்தான் அநுரகுமார திசாநாயக்க மீதான தமிழ் மக்களின் எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் வீழ்ச்சியடைய தொடங்கியுள்ளது.

அநுரகுமார திசாநாயக்கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ''சட்டம் அனைவருக்கும் சமம் '' என்ற உறுதிமொழி வழங்கப்பட்டிருந்த போதும் அவரின் ஆட்சியில் சட்டம் தமிழ் மக்களுக்கு ஒரு விதமாகவும் ஏனையவர்களுக்கு ஒரு விதமாகவும் பிரயோகிக்கப்படுவததை வடக்கு,கிழக்கில் நடக்கும் பொலிஸாரின் கைதுகள், அடக்கு முறைகள் .சட்ட அமுலாக்கங்கள் வெளிப்படுத்தி வருகின்றன.

வடக்கு - கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கம் தமது உறவுகளை தேடி வருடக்கணக்கில் போராடி வரும் நிலையில் கடந்த அரசுகளில் அவர்கள் மீது அடக்குமுறை சட்டங்கள் ஏவப்பட்டு கைதுகள் , தடுத்து வைத்தல்களுடன் வழக்குகளும் பாய்ந்த நிலையில் கடந்த 19 ஆம் திகதி வடக்கு - கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் இணைப்பாளர் மனுவல் உதயச்சந்திரா பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

மன்னாரில் இருந்து கொழும்பிற்கு வைத்திய தேவைகளுக்காக சென்ற நிலையில் அவரை கைது செய்ய பொலிஸார் அவரது வீட்டிற்கு சென்றுள்ளனர். இதன்போது அவர் வீட்டில் இல்லாத நிலையில் ''மனுவல் உதயச்சந்திராவை கைது செய்யவே வந்துள்ளோம். அவர் வருகை தந்தவுடன் உடனடியாக பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வரவேண்டும்" என உறவினர்களிடம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதன் பின்னர் 19 ஆம் திகதி காலை வைத்திய தேவைகள் முடிந்து வீட்டிற்கு சென்ற நிலையில், மன்னார் பொலிஸ் நிலையத்தில் மனுவல் உதயச்சந்திரா முன்னிலையாகிய போது கைது செய்யப்பட்டார் .இந்த நிலையில் விசாரணையின் பின்னர் மன்னார் பொலிஸார் அவரை மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்தினர். அவரை ஒரு இலட்சம் ரூபாய் சரீர பிணையில் செல்ல நீதவான் அனுமதித்தார்.

கடந்த 25 ஆம் திகதி யாழ்ப்பாணம் வடமராட்சி பகுதியில் தேர்தல் விதிமுறையை மீறி பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டி தமிழ் மக்கள் கூட்டணியின் தேர்தல் வேட்பாளர் வரதராஜன் பார்த்தீபன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். தேர்தல் துண்டு பிரசுரம் விநியோகம் செய்யப்படும் இடங்களில் வேட்பாளர்கள் சமூகமளிக்க முடியாது என்ற விதிமுறையை மீறியதாக கூறி அவர் கைது செய்யப்பட்டார். பருத்தித்துறையில் தேர்தல் துண்டுப் பிரசுர விநியோகத்தில் ஈடுபட்டிருந்த போது இந்த கைது நடவடிக்கை இடம்பெற்றது.

இந்நிலையில், அதே நாள் யாழ். வடமராட்சி, நெல்லியடியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர், கட்சியின் தலைவரும் முன்னாள் எம்.பி.யுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் தேர்தல் துண்டுப் பிரசுர விநியோகத்தில் ஈடுபட்டிருந்த நிலையில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.அவரும் தேர்தல் துண்டு பிரசுரம் விநியோகம் செய்யப்படும் இடங்களில் வேட்பாளர்கள் சமூகமளிக்க முடியாது என்ற விதிமுறையை மீறியதாக கூறி கைது செய்யப்பட்டார்.

ஆனால் நாட்டில் பாராளுமன்ற தேர்தல் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் வேட்பாளர்கள்,ஆதரவாளர்கள் தீவிர பிரசாரங்களில் ஈடுபாடு வருகின்றனர். பல இடங்களில் குறிப்பாக தென்பகுதியில் தேர்தல் விதிமுறை மீறல்கள் அப்பட்டமாக இடம்பெற்று வருகின்ற போதும் எந்தவொரு வேட்பாளரும் பொலிஸாரால் தேர்தல் விதிமுறைகளை மீறியதாக குற்றம்சாட்டப்பட்ட கைது செய்யப்படவில்லை.

அதுமட்டுமல்ல கடந்த சனிக்கிழமை தமிழ் மக்கள் கூட்டணியின் பிரசார குழு மீது நீர்வேலி கரைந்தன பகுதியில் வைத்து கூலிப்படைகளினால் கடும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.இத்தாக்குதலில் பெண்கள் உட்பட 3 பேர் படுகாயமடைந்த நிலையில் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இத்தாக்குதலை மேற்கொண்டவர்கள் யார் என பெயர் விபரங்களுடன் பொலிஸாருக்கு கட்சியினர் முறையிட்டபோது இதுவரையில் தாக்குதல் நடத்திய எவரும் கைது செய்யப்படவில்லை.

சம்பவம் தொடர்பில் தமிழ் மக்கள் கூட்டணியினர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய சென்றபோது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி முறைப்பாட்டை ஏற்க பின்னடித்துள்ளார்.அது தொடர்பில் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சருக்கு தொலைபேசி ஊடாக தமிழ் மக்கள் கூட்டணியினர் அறிவித்த போது பொறுப்பதிகாரி தான் முறைப்பாட்டை ஏற்றுக்கொண்டதாக பொய்யுரைத்து உள்ளார்.பின்னர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் அறிவுத்தலின் பிரகாரம் முறைப்பாட்டினை ஏற்றுக்கொண்டனர்.

இந்த தாக்குதலின் பின்னணியில் கூலிப்படைகள் இருப்பதாக கூறியுள்ள கட்சியின் தலைவர், க.வி.விக்னேஸ்வரன், தாக்குதல் நடத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க பொலிஸார் பின்னடிப்பதாகவும் குற்றம்சாட்டியுள்ளார். தாக்குதல் இடம்பெற்ற கரந்தன் பகுதியில் சிலர் இருக்கிறார்கள் அவர்கள் தங்களுக்கு தெரியாமல் எந்த கட்சி நடவடிக்கைகளும் இடம்பெறக் கூடாது என நினைக்கிறார்கள், பணத்திற்காக எதையும் செய்யக் கூடியவர்கள் அவர்களுக்கு ஊடாக இந்த தாக்குதல் நடந்துள்ளது.

இது தொடர்பாக பொலிஸாருக்கு சகல விஷயங்களும் தெரிய படுத்தப்பட்டுள்ளது. ஆனால் அவர்கள் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. சட்டவிரோதமான செயற்பாடுகளுக்கு பொலிஸார் மறைமுகமாக ஆதரவினை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். தாக்குதல் சம்பந்தமாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் விஜித ஹேரத்திற்கு அறிக்கை ஒன்றை அனுப்பி உள்ளதுடன், நேரடியாக பேசுவதற்கு அனுமதி கேட்டிருக்கின்றேன். பதில் இன்னும் கிடைக்கவில்லை பதிலுக்காக நான் காத்திருக்கிறேன் எனவும் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தாக்கியவர்களை பொலிஸார் கைது செய்யவில்லை என்ற குற்றச்சாட்டு வலுப்பெற்ற நிலையில் தாக்கியவர்களை கைது செய்யாத பொலிஸார் தேர்தல் பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது தாக்குதலுக்கு இலக்காகி சிகிச்சை பெற்று வரும் தமிழ் மக்கள் கூட்டணி ஆதரவாளர்களுக்கு வைத்தியசாலையில் வைத்து கை விலங்கிட்டு உள்ளனர்.

கோப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரி சனிக்கிழமை முறைப்பாட்டை ஏற்காது பின்னடித்தமை, தாக்குதலுக்கு இலக்காகி மறுநாள் ஞாயிறு அன்று வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு கைவிலங்கிட்டுள்ளமை, தாக்குதல் நடத்தியோரை கைது செய்யாமை போன்ற செயற்பாடுகள் தாக்குதல் சம்பவத்திற்கு பின்னால் பெரும் அரசியல் தலையீடு இருக்கலாம் என சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இதேபோன்றே தனது வீட்டின் மீது தாக்குதல் நடத்தியவர்கள் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டும் எந்தவித நடவடிக்கையும் இதுவரையில், மேற்கொள்ளப்படவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டணியில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளரான சசிகலா ரவிராஜ் குற்றம் சுமத்தியுள்ளார்.

தமிழரசுக் கட்சி வேட்பாளரின் ஆதரவாளர் என்று கருதப்படும் பெண் ஒருவரால் தன்னுடைய வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் வீட்டின் கண்ணாடிகள் நொறுங்கின.அதேவேளை, வீட்டு வாசல் தூணில் என்னுடைய கணவர் நடராஜா ரவிராஜின் பெயர் பொறிக்கப்பட்டிருந்தது. அதன் மீது மை பூசி அழிக்கப்பட்டது. அதேவேளை,எமது மதில் சுவர்களில் தமிழரசுக் கட்சி வேட்பாளர் ஒருவரின் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸாரிடம் முறையிட்ட போதிலும் இதுவரையில் எந்தவித நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

இவ்வாறான நிலையில் தான் நாட்டில் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கப் போவதில்லை என ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தெரிவித்துள்ளது. ஜனாதிபதி செயலகத்தின் இயக்குநர் (சட்டப்பிரிவு) சட்டத்தரணி ஜே எம் விஜய பண்டார, பயங்கரவாத தடைச் சட்டம் குறித்து எந்த பிரச்சனையும் இல்லை, ஆனால் அது சிவில் செயற்பாட்டாளர்களை பத்திரிகையாளர்களை ஏனையவர்களை தடுத்து வைப்பதற்கு பயன்படுத்தப்படுவதே பிரச்சினைக்குரிய விடயம். அது இடம்பெற அனுமதிக்கமாட்டோம். நம்பகத்தன்மை மிக்க தகவல்களை அடிப்படையாக வைத்தே பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துவோம், அரசியல் பழிவாங்கலிற்காக அதை பயன்படுத்த மாட்டோம்.பயங்கரவாத தடைச்சட்டமும் ஒரு சட்டமே அது தொடர்ந்து நீடிப்பதில் பிரச்சினை இல்லை என்று கூறியுள்ளார்.

ஆகவே இலங்கையை ஆட்சி செய்த அரசுகளினால் ,அவர்களின் பாதுகாப்புப் படைகளினால்,பயங்கரவாத, அவசரகால சட்டங்களினால் பல்லாண்டு காலமாக அடக்கு முறைகளுக்குள்ளும் அச்சுறுத்தல்களுக்குள்ளாகும் நீதி மறுப்புக்களுக்குள்ளும் அடக்கியாளப்பட்ட தங்களுக்கு ''திசைகாட்டி"புதிய திசையை காட்டப் போகின்றதென நம்பியிருந்த மக்களுக்கு அநுரகுமார அரசு ''நாங்களும் அதே அடக்குமுறை ஆட்சியாளர்கள்" தான் என்ற செய்தியையே கடந்த ஒரு மாதகால ஆட்சியில் உறுதிப்படுத்தியுள்ளது.

## கடிதங்கள்

### சுகாதார சீர்கேடா பேருந்து நிலையம்

நாளாந்தம் ஆயிரக்கணக்கான மக்கள், பாடசாலை மாணவர்கள், பேருந்து சாரதிகள், நடத்துனர்கள், ஹட்டன் நகரில் உள்ள பிரதான தனியார் அரச பேருந்து தரிப்பிடத்திற்கு வந்து செல்கின்றனர்.

அத்துடன் பிரதான பேருந்து தரிப்பிடத்தில் பல வர்த்தக நிலையங்கள் ஹோட்டல்கள் உள்ளன. இந்நிலையில், பாரிய சுகாதார சீர்கேடான கழிவறையால் அப் பகுதியில் துர்நாற்றம் வீசுகிறது. தொற்று நோய் பரவும் அபாயம் உள்ளது.

தீபதிருநாள் என்பதால் ஆயிரக்கணக்கான பயணிகள் இந்த வாரம் அந்த பேருந்து தரிப்பிடத்தில் பயன்படுத்துவர் அத்துடன் அங்கு உள்ள பொது கழிவறையை மூடி நவீன முறையில் கழிவறை அமைக்க வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

பாடசாலைகள், தனியார், அரச நிறுவனங்களுக்கும் தங்களுடைய தேவைகளை பூர்த்திசெய்து கொள்வதற்காக நகருக்கு வருவோரும், அவசர தேவைகளுக்காக இந்த மலசலக்கூடத்தையே பயன்படுத்துகின்றனர். அதற்கான ஒருதொகை பணத்தையும் செலுத்துகின்றனர். அவற்றை சுத்தமாக வைத்திருப்பதும், சுற்றாடலை சுத்தப்படுத்துவதும் பொறுப்பானவர்களின் பொறுப்பு. அதை பேணி பாதுகாப்பது பொதுமக்களின் கடப்பாடு.

செ.தி. பெருமாள்



# இவ்வருட தீபாவளி பண்டிகை சிறப்பானது ஏன்?

வித்தகர்
விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா
காரைதீவு

'தீபம்' என்றால் ஒளி, விளக்கு. 'ஆவளி' என்றால் வரிசை. வரிசையாய் விளக்கேற்றி, இருள் நீக்கி, ஒளிதரும் பண்டிகையே தீபாவளி ஆகும். தீபத்தில் பரமாத்மாவும், நெருப்பில் ஜீவாத்மாவும் வாசம் செய்து அருள் தருவதாய் ஐதீகம்.

தீபாவளி பண்டிகை இந்த ஆண்டு அக்டோபர் 31ம் தேதி வியாழக்கிழமை கொண்டாடப்பட உள்ளது.

வியாழக்கிழமை என்பது மங்கலகாரகனான குரு பகவானுக்குரிய நாள் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் அது தவிர இந்த ஆண்டு தீபாவளிக்கு வேறு சில சிறப்புக்களும் உள்ளன. வழக்கமாக பெரும்பாலான ஆண்டுகள் தீபாவளி திருநாள், அமாவாசையுடன் தான் இணைந்து வரும். ஆனால் இந்த ஆண்டு அக்டோபர் 31ம் தேதி மாலை 04.29 மணிக்கு தான் அமாவாசை திதி துவங்குகிறது.

மிக அரிதாக இந்த ஆண்டு தீபாவளி பண்டிகை, சுபநிகழ்ச்சிகள் நடத்துவதற்கான சுபமுகூர்த்த நாளில் அமைந்துள்ளது. அதிலும் அன்று நாள் முழுவதும் சித்திரை நட்சத்திரம் உள்ளது மற்றொரு தனிச்சிறப்பு.

சித்திரை நட்சத்திரம் என்பது சக்கரத்தாழ்வார், சித்ரகுப்தர், விஸ்வகர்மா ஆகியோர் அவதரித்த நட்சத்திரமாக சொல்லப்படுகிறது. இவர்கள் மூவருமே வாழ்க்கையில் வளர்ச்சி, கலைகளில் தேர்ச்சி, பலவிதமான செல்வ நலன்களையும் வழங்கக் கூடியவர்கள். ஞானத்தை அருளும் குரு பகவானுக்குரிய வியாழக்கிழமையில், சித்திரை நட்சத்திரமும் இணைந்த நாளில் இந்த ஆண்டு தீபாவளி வருகிறது. அதிலும் நல்ல விஷயங்களை துவங்குவதற்கு ஏற்ற மங்கலகரமான சுபமுகூர்த்த நாளுடன் வருகிறது.

அதனால் தீபாவளி அன்று மங்கல பொருட்கள் வாங்கலாமா? எப்போது இருந்து அமாவாசை விரதம் கடைபிடிக்க வேண்டும் என்ற குழப்பம் இந்த ஆண்டு கிடையாது. இந்த ஆண்டு தீபாவளி திருநாளான அக்டோபர் 31 ம் தேதியன்று நாள் முழுவதும் சித்தயோகம் உள்ளதால் தாராளமாக புதிய விஷயங்களை துவங்கலாம்.

அறியாமை என்னும் இருள் நீக்கி வெற்றியையும் ஒளிமயமான சிந்தனையையும் இந்த தீபத் திருநாள் பெற்றுத் தர வேண்டும்

நரகாசுரனை வதைத்த தினத்தை வீடுகளில் தீபஒளி ஏற்றி மனஇருள் நீக்கி தீபாவளி பண்டிகையாக கொண்டாடும் இத்தருணத்தில் தமிழர்களது பாரம்பரியமான பண்பாடுகளால் நம் திறமைகளை வளர்த்து நாட்டை ஒளி நிறைந்ததாக மாற்ற வேண்டும் என்றும் நல்ல மழை பொழிந்து வேளாண்மை செழிப்பாக வேண்டும்.

தீபாவளி அனைவர் வாழ்விலும் ஒளி ஏற்றட்டும்.





# "நெல்லுக்குள் அரிசி"

சயனிகா ஸ்ரீகாந்த்,
ஊடக ஆய்வுகள்,
யாழ். பல்கலைக்கழகம்.

"வாசிப்பு மனிதனைப் பூரண மனிதனாக்கு கின்றது" எனும் கூற்று பாடசாலை முதல் உரையரங்குகள் வரை வாய்ப்பாடாக கூறப்பட்டு வருகின்றது. ஆனால் அவை இப்பொருளின் உள்ளார்ந்த ஆற்றலினையும் முக்கியத்துவத்தினத்தையும் வெளிக்கொணரத் தவறிவிடுகின்றன. அதன் வெளிப்பாடாகவே வாசிப்பு பற்றிய மேல் நோக்கான பார்வை மலிந்து விட்டதனையும் சமுதாய முரண்பாடுகளிலிருந்தும் பிரச்சனைகளிலிருந்தும் விலகி நிற்க முனைகின்ற அம்சமாகவே வாசிப்பு அமைந்துள்ளதை காணலாம்.

இவ்வாறானதோர் சூழலில் வாசிப்புப் பற்றிச் சிந்திக்கின்ற போது "நெல்லுக்குள் அரிசி" என்ற பரமரகசியத்தை கூறுவது போலத் தோன்றும். ஆனால் இத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டு ஆழமாக நோக்குகின்ற போது பல புதிய விடயங்களையும் உண்மைகளையும் கண்டறியலாம்.

விஞ்ஞானபூர்வமான சிந்தனை என்பது சர்வசாதாரண விடயங்களைக் கூட மேலெழுந்தவாரியாகப் பார்த்துவிட்டு இது தெரிந்தவிடயம் தானே என முடிவு கட்டிவிடாமல் அதனையே ஆழமாகவும் பார்க்க வேண்டும் என்பதாகும்.

வாசிப்பு குறித்த தேடலையும் விஞ்ஞானபூர்வமான பார்வைக்குட்படுத்தி ஆய்வு செய்வதன்மூலம் இத்துறைசார்ந்த காத்திரமான விடயங்கள் பலவற்றினை வெளிக்கொணரலாம். "நெல்லுக்குள் அரிசி" என்ற விடயம் சிறுவர் முதல் பெரியோர் வரை தெரிந்தவிடயமாகும். இதனையே ஆழ அகலப்படுத்தி நோக்குகின்ற போதுதான் "அரிசி இல்லாத நெல்லும் உண்டு" என்ற உண்மையை அறிய முடியும். அதனையே பதர் என்று குறிப்பிடுகின்றோம். இங்கு தேடலுக்குட்படுத்தப்படும் விடயங்களிலும் பதர்களை இனங்கண்டு அவற்றினை நீக்கி விடுவதற்கும் வாசிப்பு பற்றிய தெளிவுணர்வு அவசியமான தொன்றாகின்றது.

## SH வாசிப்பு ஏன் அவசியம்?

உலகில் தோற்றம் பெற்ற அனைத்துப் படைப்புகளிலும் மனிதனே மேலான பொருள். மனிதனின் ஆளுமை, கம்பீரம், மேன்மை குறித்து உலக இலக்கிய விற்பன்னர்களில் ஒருவரான மார்க்ஸிம் கோர்க்கி இவ்வாறு குறிப்பி டுகின்றார்.

"மனிதன் எத்தனை கம்பீரமாக இச்சொல் ஒலிக்கின்றது. மனிதனை விட சிறந்த கருத்துக்கள் இல்லை. மனிதன் மட்டும்தான் எல்லாப் பொருள்களும், எல்லாக் கருத்துக்களுக்கும் படைப்பாளி, அற்புதம் செய்வோன் அவனே. இவ்வுலகில் அற்புத அழகுப் பொருள்கள் எல்லாம் அவனது உழைப்பால் ஆனவை. நான் மனிதனுக்குத் தலை வணங்குகின்றேன். ஏனெனில் மனித அறிவுக்கும் கற்பனைக்கும் அப்பால் நான் இவ்வுலகில் வேறொன்றையும் காணவில்லை. மனிதனே எல்லாப் பொருள்களுக்கும், கருத்துக்களுக்கும் படைப்பாளி".

புத்தகங்கள் என்பவை மனிதனைப் பற்றி மனிதனால் எழுதப்பட்ட வையாகும். இதனால்தான் இவை மகத்தான ஆற்றல் பெற்று விளங்குகின்றன. அவை மனித குலத்தின் வரலாற்றினை, அனுபவத்தினை, வளர்ச்சியினை எடுத்துக் கூறுகின்றன. இன்றைய மனிதன் என்பவன் திடீரென வானத்திலிருந்து குதித்தவன் அல்ல. படிப்படியாக மனித குலம் தன் உழைப்பாலும், அனுபவத்தாலும் கற்ற விடயங்களைக்கொண்டே இன்றைய வாழ்வினைச் சிருஷ்டித்துள்ளது.

எனவே "தேடல்" "வாசிப்பு" என்ற பதங்கள் மனித வாழ்க்கையின் பிரச்சினைகளையும் முரண்பாடுகளையும் கண்டு அவற்றிலிருந்து விடுபட்டு நிற்காமல், அவற்றினை எதிர்கொண்டு புதியதோர் நாகரிகத்தினை நோக்கி மனித வாழ்க்கையினை நகர்த்துவது இதன் தலையாய அம்சமாகும். வாழ்க்கை மீதான காதல், நம்பிக்கையுணர்வு, நேர்மை என்பன புதிய நாகரிகத்தின் உள்ளடக்கங்களாகும்.

> சிதைக்கின்ற நசிவு இலக்கியங்களும் நம்மத்தியில் பல்கிப் பெருகிக் கொண்டிருக்கின்றன
>
> பாரதி தன் வாழ்வில் எத்தனையோ அவலங்களைச் சந்தித்துள்ளான்
>
> ஆய்வு செய்வதன்மூலம் காத்திரமான விடயங்கள் வெளிக்கொணரலாம்
>
> இனங்கண்டு நீக்குவதற்கும் வாசிப்புடன் கூடிய விஞ்ஞான பூர்வமான பார்வை அவசியம்

## எவற்றை வாசிக்க வேண்டும்?

மேற்குறித்த கருத்தினை அடிப்படையாகக் கொண்டு நோக்குகின்ற போது "வாசிப்பு மனிதனை பூரண மனிதனாக்குகின்றது" என்ற கருத்து வெளிப்படும். அப்படியாயின் வாசிக்கின்ற அனைவரும் பூரண மனிதர்களா? புத்தகங்கள் அனைத்தும் மனித ஆற்றலை வெளிப்படுத்துகின்றனவா? போன்ற வினாக்கள் எழுகின்றன.

மனித நேயத்தின் ஆணிவேர்களைத் தின்று தீர்த்துவிட்டு மனிதனின் ஆற்றல்களை பண்புகளை எந்தெந்த வகையில் சிதைக்க முடியுமோ அந்தந்த வகையில் சிதைக்கின்ற நசிவு இலக்கியங்களும் நம்மத்தியில் பல்கிப் பெருகிக் கொண்டிருக்கின்றன.

"நெல்லுக்குள் அரிசி" என்ற உதாரணத்திற்கு வருவோம். அரிசி இல்லாத நெல் பதர்கள் எனக் குறிப்பிட்டோம். இவ்வாறுதான் மனிதத்தன்மை இல்லாத புத்தகங்களும் காணப்படுகின்றன. அவற்றினை இனங்கண்டு நீக்குவதற்கும் வாசிப்புடன் கூடிய விஞ்ஞான பூர்வமான பார்வை அவசியமான தொன்றாகிறது.

மனிதனின் உடல் ஆரோக்கியத்திற்கு நல்ல உணவு எவ்வளவு அவசியமோ அவ்வாறே அவனது உள ஆரோக்கியத்திற்கு நல்ல இலக்கியங்கள் அவசியமாகின்றன.

வாசிப்பு பூரணத்துவம் என்பன பற்றிச் சிந்திக்கின்ற போது புத்தகங்களில் கற்ற விடயங்களை யதார்த்த வாழ்வோடு இணைத்தும், வரலாற்றுடன் இணைத்தும் தமது அனுபவங்களைப் பட்டைதீட்ட முனைகின்ற போதுதான் அவை அர்த்தமுள்ளதாகின்றன.

## வாசிப்பதற்கு நேரம் உண்டா?

நவீன விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக மனிதனின் வேலைப்பளு அதிகரித்துள்ளது. எனவே வாசிப்பதற்கான அவகாசம் இல்லை. என நம்மில் பலர் முறையிட்டுக்கொள்கின்றனர். இவர்களின் இக்கூற்றுக்கள் எந்தளவு பொருத்தப்பாடுடையது என்பதை மார்க்ஸிம் கோர்க்கி, பாரதி என்போ ன் வாழ்க்கைச் சம்பவங்களை ஆதாரமாகக் கொண்டு நோக்குவோம்.

கோர்க்கியின் வாழ்க்கை வரலாறு மிகவும் சுவாரசியமானது. இவர் பாடசாலை சென்று கல்வி கற்கவில்லை. சிறுவயதிலே தாய், தந்தையரை இழந்து தாத்தாவின் வீட்டில் வாழ்ந்தவர். கடைச்சிப்பந்தியாக, சுமை கூலியாக, ஹோட்டல் தொழிலாளியாக, ரொட்டி சுடுபவராக, பறவைகள் பிடிப்பவராகப் பல தொழில்களைச் செய்தவர். இவர் தனது வாழ்க்கையினைப் பல்கலைக்கழகமாகவும், பயிற்சிக்களமாகவும் கொண்டு கல்வி கற்றார். இவரது வாழ்வில் இடம்பெற்ற சம்பவமொன்றினைத் தேவை நோக்கி இங்கொருமுறை குறித்துக் காட்டுவது அவசியமானதொன்றாகின்றது.

கோர்க்கி சிறுவயதில் ஒரு கொடுமைமிக்க எஜமானியிடம் வேலைக் கமர்த்தப்பட்டார். இக்காலப் பகுதியிலே வாசிப்பு ஆர்வம் அதிகமாக வளர்ந்தது. கடவுளுக்காக கொளுத்தப்பட்டிருக்கும் மெழுகுவர்த்தியின் வெளிச்சத்தில் புத்தகங்களை வாசிக்கும் கோர்க்கி, சில சமயங்களில் அவற்றில் ஆழ்ந்து போய் மேசை மீது தூங்கிவிடுவதும் உண்டு. இரவு நேரத்தில் அதிகமாகக் கண்விழித்துப் படிப்பதனால் எஜமானியம்மாவின் வேலைகளைச் சரிவர செய்ய முடியாமல் போனமைக்காக இவர் பல தடவைகள் தண்டனைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

இவையொருபுறமிருக்க கோர்க்கியின் புத்தக வாசிப்பு என்பது தொடர்ந்து கொண்டேயிருந்தது. எனவே அவர் வேறு அறைக்கு மாற்றப்பட்டார். பழைய பொருட்களைப் பாதுகாக்கும் களஞ்சிய அறையாக அது காணப்பட்டது. எதிர்பாராத விதமாகக் கடவுளுக்காகக் கொளுத்தப்பட்டு எஞ்சிய மெழுகு வர்த்திகளும் அங்கு போடப்பட்டிருந்தன. எல்லோரும் தூங்கிய பின்னர் அவற்றினைக் கொளுத்தி அவ்வெளிச்சத்தில் தமது வாசிப்பினைத் தொடர்ந் தார் கோர்க்கி. எஜமானிக்கு இதிலும் சந்தேகம் ஏற்பட மெழுகுவர்த்தியின் உயரத்திற்கேற்ப பலகைக் கீலங்களை அதனுடன் இணைத்து வைத்திருக் கின்றார். கோர்க்கி மிக தந்திரமாக உபயோகித்துவிட்டு பின்னர் மெழுகு வர்த்தியின் உயரத்திற்கேற்ப பலகைக் கீலங்களை சமன்செய்து விடுவார். இவ்வாறு வாழ்க்கையில் பல இன்னல்கள் தலைகாட்டியபோதும் இவற்றினை எதிர்கொண்டு வாசிப்பினைத் தொடர்ந்தவர் கோர்க்கி.

பாரதியின் வாழ்க்கை வரலாற்றினைப் பற்றிக் கூறவேண்டிய அவசி யமேயில்லை. துன்பியலில் உழன்றும் ஏறாய் நின்ற பாரதி தன் வாழ்வில் எத்தனையோ அவலங்களைச் சந்தித்துள்ளான்.

இந்நிலையில், வாசிப்பதற்கு நேரமில்லை என்ற முறையீடு எந்தளவு நியாயமானது? இன்றைய இயந்திர உலகில் மனிதனின் வேலைப்பளு, வாழ்க்கைப் பிரச்சினை என்பன அதிகரித்துள்ளன என்பது உண்மைதான். ஆனால் வாசிப்பதற்கு நேரம் இல்லை எனக் கூறுமளவிற்கு நாம் இயந்தி ரங்களோடு இயந்திரமாகி விடவில்லை.

"வாசிப்பு", "தேடல்" எனும் விடயங்களைக் கல்வி நாகரிகப் போக் காகக் கொண்டு சிற்சில விடயங்களைக் கற்றுத் தலைவீங்கித் திரிகின்ற உளநோயாளராக அல்லாமல், மாறிவரும் சமுதாயச் சூழலைப் புரிந்து கொள்ளவும், நாகரிகமான வாழ்க்கையைச் சிருஷ்டிக்கவும் முனைகின்ற போது தான் அவை அர்த்தமுள்ளதாகின்றன.

Rapport





# அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்



பிரம்மியா சண்முகராஜா (பிரமி)

மல்லிகா அவள் தாய் மெலிதான சிவந்தவள். தந்தை சொக்கநாதன் அதேபோன்றவன். இவர்கள் இருவரின் உறவினர்கள் கூட கருமையானவர்கள் இல்லை. ஆனால், எப்படி சிந்தனா மட்டும் இவ்வளவு கருமையானாள்?

இவளின் துருதுருப்பு சாதுரியமெல்லாம் இவளை மற்றவர்கள் வியந்து பார்க்கும் விதமாகவே இருக்கும். ஆனாலும் அவள் திறன்களை விட கருமையைப் பற்றித்தான் எல்லோரும் பேசிக் கொள்வர்.

ஆசை அறுபது மோகம் முப்பது கடந்து போதைப் பானங்களில் மூழ்கி இன்பம் கண்டு கொண்டிருந்தான் சொக்கநாதன்.

காதல் திருமணத்தின் பரிசு கறுப்பி சிந்தனா. இவள் நடக்கும்போது ஒருவித ஆண் தன்மை வேகம், பேசும்போதும் அதே தடித்த ஒலி ஒருவித மிடுக்கான அழகு அவள்.

சொக்கநாதன் சகோதரர்களுக்கு சிந்தனாவின் வயதில் பிள்ளைகள் இருந்தார்கள். அவர்கள் இவளை தொட்டால் ஒட்டிவிடும் என்பது போன்று காண முன் கறுப்பிவாரா என முகம் சுழிப்பது குழந்தை பருவத்திலேயே ஆரம்பமானது.

சொக்கநாதனின் மனைவி மல்லிகாவின் பெற்றோர் சாதி குறைந்தவர்கள் மல்லிகா பார்க்க பெண்மைக்கு இலக்கண மாணவள் ஆனாலும் அவளுக்கு காதல் நேசம் நீண்டு கை தரவில்லை எப்படியாவது சொக்கனையும் மல்லிகாவையும் பிரித்துப் போட வேண்டும் என்று கங்கணம் கட்டி வெற்றி கண்டவர் ரத்தினம் மாமி.

இப்போ மல்லிகா தனிச்சு தன் தாய் வீட்டில் இருந்தாள் அவளுக்கு 28 வயது பதினாறு வயதில் திருமணம் செய்து கொண்டவள் அவள். மகளும் தாயும் போனால் சகோதரமோ? என்பார்கள்.

ஊர்விடுமா வாழ மல்லிகா வேலைக்கு போய் தன் பிள்ளையை பராமரித்தாள். மகள் பெரியவளாகப் போறாள் தன் வாழ்வு தான் போச்சு மகள் வாழ்வை எண்ணி கூலிக்கு அங்கங்கே வேலைக்கு போய் வீடு வீடா சமையல், கடைகளில் சமையல் என அஞ்சப்பத்ததேடி அண்டண்டைக்கு காலம் கழித்து இருந்தாள் மல்லிகா.

சொக்கநாதனுக்கு சொந்த புத்தி இல்லை ரத்தினம் அவனுக்கு புது பொண்ணு தேடிட்டு இருந்தாள். அவள் விருப்பம் எதுவும் நடக்கவில்லை.

புதுசு புதுசா போதைக் குளியல்ல அவன் காணாமல் போய்க்கொண்டிருந்தான்.

சொக்கநாதன் மல்லிகா இருவரும் வேறு வேறு ஊரைச் சேர்ந்தவர்கள். மீண்டும் சந்திப்பதற்கு வாய்ப்புக்கள் இல்லை.

இவள் கூலிக்கு அவன் குடிக்கு என தேடிக் கொண்டே காலம் ஓடியது.

சிந்தனா 12 வயதில் பெரியவள் ஆனாள் அங்கங்கே குறுணியா சேர்த்து வைத்த பணத்தில் கண்ட தண்ணிய ஊத்தி துடக்ககழிச்சு பத்து நாள்ல பள்ளிக்கு அனுப்பி வைத்தாள் மல்லிகா.

சிந்தனாவுக்கு தன்னை கறுப்பு என்று யார் சொன்னாலும் கோபம் வரும் இன்றைக்கு அம்மம்மா இவளை பார்த்து பாரு இவள அந்த ரத்தினத்தை போல என்று சத்தம் வச்சாள் அவளால பொறுக்க முடியல! அப்பா அம்மா பிரிவு அவளது மனசுல பேர்இடியாக மறைந்து கிடந்தது. தன்னை எல்லாரும் சுமையாக, குறையாக பார்க்கிறதாகவே நினைச்சுட்டு இருந்தாள்.

மல்லிகாவுக்கு 28 வயது. வாழவேண்டிய வயதுல கசாதும் வைக்காமல் தாலிய கட்டி புள்ளைய பெத்துட்டு மூலைக்க இருக்காள் என்று அவளுக்கு புதுவரன் தேடிக் கொண்டிருந்தார்கள். அவளுக்கு அதுல விருப்பமில்லை.அவள் சிந்தனாவை பார்த்துக்கொள்ள கூலிக்காரியாக ஓடிக்கொண்டே இருந்தாள்.

காலம் மாற மனசு மாற வெளிநாட்டு சம்பந்தம் எப்படியோ சம்மதிக்க வைத்து அவளை வெளிநாட்டுக்கு இரண்டாம் தாரமாக தாரை வார்த்துக் கொடுத்துவிட்டாள் மல்லிகாவின் அம்மா.

சிந்தனாவின் சின்ன மனசுக்கு சிலுவைகள் பல இடி இடியாய் ஏற்றப்பட்டன.

இப்போ சிந்தனாவை விடுதியில் விடவேண்டும். விடுமுறைக்கு பட்டணத்தில் புஷ்பன் மாமா வீட்ட தங்கிக்கலாம் .

அம்மா அப்பா இருந்தும் யாருமில்லாஉணர்வு!!

நான் கறுப்பு!!

ஆம்புள மாதிரி நடக்கிறன்!!

குரல் வேற சரியில்லை!!

என தன்னைத்தான் தாழ்த்திக் கொண்டு பட்டியல் படுத்திக் கொண்டாள் சிந்தனா. விடுதி வாழ்க்கை கடந்து கொண்டிருந்தது.

அவளை கறுப்பு என்று யார் சொன்னாலும் ஆழ யோசித்து தன்னைத்தான் குறைத்துக் கொள்வாள் சிந்தனா.

விடுமுறைக்கு மாமா விட்ட போனா அவங்க பிள்ளைகள் இவள எச்சில் போல பார்ப்பாங்க இவளுக்கு சாப்பிட தனிக்கோப்பை குடிக்க தனி சில்வர், படுக்க தனிப்பாய், மாதவிலக்கு நேரங்களில் விறாந்தையின் வெளியில் தான் இருப்பு உறக்கம் எல்லாம். சிந்தனா தனக்குள்ளே அடக்கி அடக்கி தனிமையின் எல்லைக்கே வந்திருந்தாள்.

கல்லூரி படிப்பு எல்லாம் அவளுக்கு தூரம் ஆகின்றது.

புத்தகங்கள் பாரமாகின்றது.

ஏதோ சுமக்க வேண்டும் என சுமந்து விடுதிக்கு போய்விடலாம் என நடந்தாள்.

விடுமுறைகளும் விடுதியில் கழிக்கின்றது அவளுக்கு.

அன்று விடுதி சுத்தம் செய்து மீள்திருத்தம் செய்ய ஏற்பாடுகள் நடந்தன. மாணவர்களை வீட்டுக்கு அனுப்ப உத்தரவுவழங்கப்பட்டது. சிந்தனாவுக்கு மாமா வீட்டுச்சிறைக்குப் போக சற்றும் விருப்பமில்லை.

நான் ஏன் கருப்பு?

என் நடை ஏன் இப்படி?

என் குரலுக்கு என்ன?

அம்மா அப்பா யாரும் என்னை போல் இல்லையே?

அதனாலா என்னை தனியா விட்டுவிட்டாங்க?

பட்டியல் படுத்திக் கொண்டாள்.

எல்லாரும் தங்கள் தங்கள் பைகளுடன் புத்தகங்களையும் எடுத்துக் கொண்டு விடுதி திருத்தத்திற்காக ஒத்துழைத்தனர். மாணவர்கள் விடுமுறைக்கு வீட்டுக்கு செல்லும் ஆனந்தத்தில் கலகலத்து பறந்தனர். சிந்தனா இறுகியவளாய் வீதி மண்ணுக்கு நோகுமென ஒற்றி ஒற்றி நடந்தாள்.

மாமா வீடு புகையிரத கடவைக்கு அந்த புறம். மாமா மகள் கத்துகிறாள் இவளை கண்டதும் அங்க பார் கறுப்பி ஆபிரிக்காக்காரி வீட்ட வரப்போறாள் கிண்டல் பண்ணி கடந்து சென்றனர்.

சிந்தனாவுக்கோ என்ன செய்வது தெரியவில்லை.

தண்டவாளம் கடக்க மாமா வீடு வந்துவிடும் பாதம் நடக்க ஒத்துழைக்கவில்லை கண்கள் அருவியாக பெருக்கெடுக்கின்றது. அவள் அவலக் குரல் யாருக்கும் கேட்காதபடி அந்த புகையிரதம் வந்து கொண்டிருந்தது இத்தனை கூச்சலிட்டு வரும் அந்த கோச்சு வண்டி சத்தம் அவள் காதுகளுக்கு கேட்காதபடி சிந்தனை அதை நிரப்பியிருந்தது இவள் பாதம் தண்டவாளங்களில் ஏறிக்கொள்கின்றது புகையிரதமும் வேகமாக அண்மித்துக் கொண்டிருந்தது அவள் உறைந்த உணர்வுகள் அவளுடன் ஆமைநகர்வாகிக் கொண்டிருந்தது . மாமாவின் பிள்ளைகள் சிந்தனா என அலப்பாரித்தனர். அவள் பின்னே ஓடிவந்த அந்த நாய்க்குட்டியை மோதி ஓடும் குருதியையும் அள்ளித் தெளித்தபடி கடந்து போனது அந்த புகையிரதம். இப்போ ஆபிரிக்காகாரி கறுப்பி சிந்தனாவின் பக்கம் மூச்சிரைத்து ஓடிவந்த மாமா பிள்ளைகள் நேஞ்சில் கை வைத்து அப்பாடா உங்களுக்கு ஒண்ணுமில்லயே பாத்து வரக்கூடாதா என்று அவளை அணைத்துக் பதறினர். இனம் தெரியாத மகிழ்வு சிந்தனா இவர்களா ? சற்றுமுன் கேலிசெய்தார்கள் சீச் சீ இருக்காது என தன்னைத் தேற்றிக் கொண்டாள் குழந்தைகள் கெட்டதையா? இல்லை கேட்டதைத்தானே பேசுகிறார்கள். நடந்தவை மாமாவீட்டில் கண்ணீரோடு ஒப்புவிக்கப்பட்டது . மூத்தவள் தன் தட்டில் உணவைப் பரிமாறி சிந்தனா விடம் நீட்டினாள். உயிர் உடலிலும் உணர்விலும் மீண்டுவந்தது அவள் ஆனந்தம் கலந்து நிறைந்த கண்களில் தெரிந்தது.



# நிலாவரைக் கிணறு



தங்கராசா விதுஷன்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.
(புதன்கிழமை தொடர்ச்சி)

**ஆரம்பத்தில் நிலா வரையில் மேற்கொண்ட ஆய்வுகள் பொதுவாக ஆழம் பற்றி அறியப்பட்டதாகக் காணப்படுகிறது. இங்கு மேற்கொண்ட ஆய்வில் முக்கியமானது 2016ஆம் ஆண்டு ஏப்ரல் 23ஆம் திகதி குடாநாட்டில் வெப்பநிலை 36 பாவை செல்சியஸை காட்டியது. ஆனால், குடாநாட்டில் மிகவும் ஆழமான பகுதியில் நீருக்கு அடியில் அதன் வெப்பநிலை 26 பாகை செல்சியஸ் என பதிவாகியது. அன்றுதான் பல உண்மைகள் வெளிக்கொண்டு வருகின்றன இதனால் இவ் அகழாய்வு முக்கியம் பெறுகின்றது.**

இலங்கை கடற்படையின் சுழியோடிகள் ரோபோக்களின் உதவியுடன் நிலாவரை கிணற்றின் ஆழத்தை அறியும் வண்ணம் சகல நவீன பாதுகாப்பு நடைமுறைகளையும் பின்பற்றியவாறு கிணற்றுக்குள் இறங்கினார்கள் கிணற்றுக்குள் 55 மீட்டர் சென்றபோது கீழ்மட்டம் தென்பட்டது இரண்டு பனை அல்லது தென்னை மரங்களின் உயரம் கொண்டதாக இந்த கிணற்றின் ஆழம் காணப்படுகின்றது. மற்றும் அக்கிணற்றின் அடிப்பாகத்திலிருந்து மூன்று மாட்டு வண்டிகள் காணப்பட்டதும் சுழியோடிகள் கொண்டு சென்ற ரோபோக்கள் எடுத்த படங்களின் மூலம் தெரிய வந்துள்ளது.

இந்த நீரடி அகழ்வாய்வில் ரோபோக்கள் என்ற உயர் தொழில்நுட்பம் பயன்படுத்திய வகையில் முக்கியம் பெறுகின்றது. இங்கு கண்டுபிடித்த மாட்டு வண்டில்களில் ஒரு வண்டில் முற்றாக சிதைவடைந்த நிலையிலும் மற்றையவை மாட்டு வண்டிகள் என உருவத்தை அடையாளம் காணக்கூடியவாறும் காணப்படுகின்றது.

இதை மாட்டு வண்டிகளுக்கு கிணற்றுக்குள் எவ்வாறு வந்தன என்பது தொடர்பில் எதுவித தகவலும் கிடையாது. வண்டில்களின் நிலைய வைத்துப் பார்க்கும்போது, இந்த சம்பவம் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் இடம் பெற்றிருக்கலாம் என அனுமானிக்க முடிகிறது. இந்த மாட்டு வண்டிகள் கிடைக்கப்பெற்றதன் மூலம் போக்குவரத்து பொருட்களை ஏற்றிச் செல்ல பயன்படுத்தப்பட்டு இருக்கலாம் எனவும் மற்றும் மக்களின் தொழில்நுட்பம் கலை உணர்வு அறிவியல் போன்ற இன்னொரன்ன தகவல்களைத் தருவதால் எங்கு மேற்கொண்ட நீரடி அகழ்வாய்வு முக்கியம் பெறுகிறது.

மற்றும் இவ் ஆய்வில் இன்னொரு உண்மையை நிரூபிக்கப்பட்டது. நிலாவரை கிணற்று முழு எலுமிச்சம்பழத்தைப் போட்டால் அதை சில மணி நேரத்தின் பின்னர் கீரிமலை தீர்த்த கேணியில் என கூறுவது வழக்கம். அதற்கான சாத்தியப்பாடுகள் இருப்பதை ரோபோக்களின் ஆய்வுகளின் நிறுவனம் செய்கின்றன. ஏனெனில் கிணற்றிலிருந்து பல திசை நோக்கிச் செல்லும் சுரங்கப்பாதைகளின் ஊடாக நீரோட்டங்கள் காணப்படுகின்றன. கீரிமலைக் கேணியின் தென்கீழ மூளையில் குகை ஒன்று காணப்படுகின்றது. அதனூடாகவே கேணிக்கு நல்ல தண்ணீர் வருகின்றது. இந்த குகைக்கும் நிலாவரை கிணற்றில் ரோபோக்கள் உறுதிப்படுத்திய குகைக்கு இடையிலான நீரோட்ட தொடர்பும் இருப்பது அறிந்து கொள்ள முடிகின்றது. நிலாவரை கிணற்றுக்குள் நேரடியான நிலத்தடி நீர் தொடர்பும் இருப்பதனால் வறட்சியின் போது மழைக்காலத்தின் போதும் நீரோட்டம் குறைவது கூடுவதோ கிடையாது. இலங்கையின் வடபகுதியின் குறிப்பாக யாழ்ப்பாண குடா நாட்டின் தரைத்தோற்ற அமைப்பை நிலத்தடியில் காணப்படும் குறைகளுக்கான காரணமாகும்.

மற்றும் இந்த ஆய்வின்போது, ஆழம் கண்டறியப்பட்டுள்ளதுடன் இங்குள்ள நீர் 31 அடிவரையான காலத்திற்கு நன்னீராக உள்ளது. அதன் கீழ் 81 அடிவரையும் உவர் தன்மையாக உள்ளது என்பது கண்டறியப்பட்டது .கிணற்றில் மேற்கொண்டு ஆய்வின்படி 10 மணித்தியாலங்களில் 30,000-40,000 கலன் நீரோட்ட பாசனத்திற்காகக் கிணற்றிலிருந்து எடுக்கக்கூடிய தன்மை வெளியிடப்பட்டது.

இவ்விதம் 2016 ஆம் ஆண்டில் இக்கிணற்றில் ஆழம் அறியப்பட்டதுடன் நிலத்தடி நீரோட்டம் நிரூபிக்கப்பட்டதுடன் மூன்று மாட்டு வண்டிகளும் மக்களது வாழ்வாதாரத்தை எடுத்துக்காட்டுவதுடன் மற்றும் இலங்கையில் ரோபோ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி முதன்முதலில் ஆய்வு செய்தமையால் இவ் நீரடி அகழ்வாய்வு முக்கியம் பெறக் காரணமாகும். இவ்வாய்வின் மூலம் பல உண்மைகள் கட்டவிழ்க்கப்பட்டது இதனால் நிலாவரையில் மேற்கொண்ட நீரடி ஆய்வு முக்கியம் பெறுகிறது. (முற்றும்)



# முதுமை விலைமதிப்பற்றது

## வாழ்க்கையின் பாடம்: பாட்டியுடன் ஒரு உரையாடல்



தருமலிங்கம் லுகிர்தா,
ஊடக கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்

கஷ்டங்களை எதிர்கொள்ளுங்கள், ஆனால் பசியையும் சந்தோசத்தையும் மறக்க வேண்டாம். பாட்டியுடன் கதைப்பது என்றாலே எல்லோருக்கும் விருப்பம் தான் ஆனால், எல்லோருக்கும் தாத்தா, பாட்டி உறவுகள் அமைவதில்லை . அம்மா, அப்பா இருவரும் கரம் பிடித்து பாடசாலை கூட்டிச் சென்று விடும் காலம் மாறி பிள்ளைகளோ அவர்களை முதியோர் இல்லம் கூட்டிச் சென்று விடும் காலமாக இந்த நாகரீக காலம் மாறிவிட்டது என்பது தான் இளையோருக்கு பழமையின் வழியே புதுமை வாசம் செய்யாமல் இருக்க காரணம். அது மட்டுமன்றி அவர்களின் முதுமை விலைமதிப்பு அற்றது என்பதே நிதர்சனமான உண்மை.

85 வயதான பூரணம்மா பாட்டியின் வாழ்க்கையை, அவருடைய சவால்களை, அனுபவத்தை, மற்றும் இளையோருக்கான அறிவுரைகளை உள்ளடக்கிய தனது அனுபவங்களை என்னுடன் பகிர்வதில் அவருடைய மகிழ்ச்சியாக இக் கட்டுரை...

யாழ்ப்பாணம், அதன் இனிமையான இயற்கை, பண்பாட்டுப் பண்புகள் மற்றும் வரலாற்றுப் பின்னணி ஆகியவற்றால் பிரசித்தமான இடமாகவுள்ளது. இது, இந்த தீவின் வடக்கு பகுதியில் அமைந்துள்ள ஒரு அழகான நகரம், அதன் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியங்கள் மக்கள் மனதில் சிறப்பாக வலுப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு வாழும் முதியோர், குறிப்பாக பாட்டிகள், தங்கள் வாழ்க்கை அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் இளையோருக்கான பல பயனுள்ள அறிவுரைகளை பெற முடிகிறது.

பூரணம்மா பாட்டி 1939 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பிறந்தவர். அவரது குடும்பம் விவசாயத்தில் ஈடுபட்டது. "என் பெற்றோர் விவசாயத்தில் உழைத்து எங்களை வளர்த்தனர். எங்கள் குடும்பத்தின் வாழ்க்கை எப்போதும் உழைப்பில் நிரம்பியது," என்றார். என் குடும்பத்தில் 9 பேர் இருந்தனர். என் அப்பா மற்றும் அம்மா, நாங்கள் நன்கு வாழ்வதற்கு மிகவும் முயற்சி செய்தனர். ஆனால், எங்கள் வாழ்க்கை எப்போதும் சவால்களால் நிரம்பியது," என்றார்.

**பல்வேறு நிகழ்வுகளை கொண்டாடுகிறோம். குடும்பம் மற்றும் நண்பர்கள் சந்தித்து மகிழ்ச்சியாக கொண்டாடுவது எங்கள் கலாச்சாரத்தின் அடையாளமாகும்.**

**எமது அடையாளம், பெருமை. அதை நாங்கள் கற்றுக் கொண்டு, செம்மைப்படுத்த வேண்டும். இளையோர்கள் தமிழ் மொழியுடன் மேலும் உறவுகொண்டு, அதை வளர்க்க வேண்டும்**

பூரணம்மா பாட்டி, தனது பள்ளி நாட்களை நினைவுகூரும் போது, என் பள்ளி அனுபவங்கள் மிகவும் இனிமையாக இருந்தது. நான் படிக்கும் போது, என்னை ஆதரிக்க ஆசிரியர்கள் இருந்தனர், என் பள்ளியில், தமிழ் மற்றும் கணிதத்தில் சிறந்தவர். ஆனால், சில நேரங்களில் என்னால் பள்ளிக்கு செல்ல முடியவில்லை, ஏனெனில் நான் வீட்டுப் பணிகளில் ஈடுபட்டிருந்தேன், கல்வி என்பது ஒரு மனிதனின் முன்னேற்றத்தின் அடிப்படையாகும். நான் என் பெற்றோரிடமிருந்து இதை கற்றுக் கொண்டேன். இன்றைய இளையோர்கள் கல்வியை மதிக்க வேண்டும்," என்றார்.

திருமண அனுபவத்தை என்னுடன் பகிர்ந்து கொண்ட போது..


பூரணம்மா பாட்டி, 20வது பிறந்த நாளில் திருமணம் செய்து கொண்டார். "என் கணவர் விவசாயத்தில் இருந்தார். எங்கள் திருமணம் ஒரு சந்தோஷமாக இருந்தது. ஆனால், வாழ்வின் சவால்கள் எங்களை எப்போதும் பாதித்தது," என் கணவர் மற்றும் நான் ஒரு குழுவாகவே வேலை செய்தோம். எங்கள் குடும்பம் எப்போதும் ஒற்றுமையுடன் இருந்தது. குழந்தைகளை வளர்ப்பதில், வேலை மற்றும் வீட்டுப் பணிகளில் நான் அதிகமாக ஈடுபட்டேன், என்னுடைய குழந்தைகள் நன்றாக வளர்ந்தனர். அவர்கள் நல்ல கல்வி பெற்று, இன்று வாழ்க்கையில் நல்ல நிலையை அடைந்துள்ளனர்.

பூரணம்மா பாட்டி, தனது வாழ்க்கையில் சந்தித்த சவால்களை விவரிக்கும்போது, "நாம் மிகுந்த கடினமான காலங்களை எதிர்கொண்டோம். பஞ்சம், வேலை, குடும்ப வாழ்க்கை ஆகியவை எப்போதும் சவாலாக இருந்தன,"

என் காலத்தில், , என் கணவர் மட்டும் வேலை செய்யவேண்டும். இது மிகுந்த சிரமம் தந்தது. இன்றைய தலைமுறை, கல்வியில் மற்றும் தொழிலில் முன்னேற்றம் அடைந்துள்ளது. ஆனால், அதற்காக அவர்கள் பல சவால்களை எதிர்கொள்கிறார்கள். இன்று, பெண்கள் கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் முன்னேற்றம் அடைந்துள்ளனர். இது மிகுந்த மகிழ்ச்சியான விஷயம், ஒரு சமுதாயத்தில் பெண்கள் முக்கியமான பங்குகளை வகிக்க வேண்டும். அவர்களுக்கு உரிமைகள் மற்றும் வாய்ப்புகள் வேண்டும், இன்று, பெண்கள் அதிகமாக கல்வி பெற்று, தொழில்கள் செய்கின்றனர். இது சமூகத்தில் ஒரு பெரிய மாற்றத்தை உருவாக்கியுள்ளது," என்றார் பூரணம்மா பாட்டி.

நாங்கள் பல்வேறு கலாச்சார நிகழ்வுகளை கொண்டாடுகிறோம். அதில் தீபாவளி, பொங்கல் மற்றும் பிற உற்சவங்கள் உள்ளன, இந்த விழாக்களில், குடும்பம் மற்றும் நண்பர்கள் சந்தித்து மகிழ்ச்சியாக கொண்டாடுவது எங்கள் கலாச்சாரத்தின் அடையாளமாகும். எமது உற்சவங்களில் உணவு, பண்டிகைகள் மற்றும் உறவுகளைப் பரிசுத்தமாகக் கொண்டாடுகிறோம். இது எங்கள் குடும்பத்தின் ஒற்றுமையை மேலும் வலுப்படுத்துகிறது," என்றார்.

"என் பேரன்-பேத்திகள் நல்ல கல்வியால், அவர்களின் வாழ்க்கையில் வெற்றி பெறவேண்டும். நான் என் பேர பிள்ளைகளுக்கு (grandchildren க்கு) எங்கள் பாரம்பரியத்தை கற்றுத்தர விரும்புகிறேன், இலங்கையில், எமது சமுதாயத்தை முன்னேற்றப் பங்களிக்க, இளையோர் கல்வியை மதித்து, பணியாற்ற வேண்டும்," என்றார்.



பூரணம்மா பாட்டி, தனது மனநிலையைப் பற்றி பேசும்போது, "என்னுடைய மனசுத்தம் மற்றும் மனநிலையை சுத்தமாக வைத்திருக்கிறேன், வாழ்க்கை என்பது கடினமானது, ஆனால், நான் எப்போதும் சுறுசுறுப்பாகவே இருப்பேன், ஒரு மனதின் நிலை வாழ்க்கையை மாற்றலாம். என்னுடைய மனது எப்போதும் இனிமையாகவே இருக்க வேண்டும்," என்கின்றார்.

வாழ்க்கையில் ஏழ்மையை எதிர்கொண்டாலும், எங்கள் குடும்பத்தின் நம்பிக்கையாகவும், வழிகாட்டியாகவும் இருந்தேன். அவர்கள் அன்றாட சிரமங்களை தாண்டி, அன்பு, பொறுமை, மற்றும் அனுபவத்தின் ஆழமான அறிவு கொண்டு குடும்பத்திற்கு உறுதுணையாக இருந்தேன். இதிலிருந்து இளையோரான நாம் பாட்டியின் சிந்தனை, சிக்கனமான வாழ்க்கை முறை, கஷ்டங்களை தாங்கும் சக்தி, மற்றும் தன்னலமற்ற சேவைகள், வருங்கால சந்ததிகளின் வாழ்க்கையில் உறுதியான ஆதாரமாக இருந்தனர் என்பதையும், பெரும்பாலான குடும்பங்களில் பாட்டி, குடும்பத்தில் ஒற்றுமையைக் காக்கும் மையமாகவும், வாழ்வின் பாடங்களை போதிக்கும் குருவாகவும் விளங்கியுள்ளனர் என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும்.

### இளையோருக்கான அறிவுரையாக

"என்னுடைய அறிவுரை இளையோருக்கு, கல்வியில் மட்டுமே உள்ளது. உங்கள் கனவுகளை அடைய உங்களின் இலக்குகளை தெளிவாகக் கொண்டிருக்கவும்," என்றார்.

### கடின உழைப்பு

"உங்கள் கனவுகளை நிறைவேற்ற, கடின உழைப்பு மிகவும் அவசியம். மற்றவர்களை மதிக்க, எப்போதும் கற்றுக்கொள்ளவும்," என்றார்.

### சமூகத்துடனான தொடர்பு

இன்றைய இளையோர்கள், சமூகத்தில் எந்தவொரு மாற்றத்தையும் உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்க வேண்டும். கல்வியை மதித்து, சமூக சேவையில் ஈடுபடுங்கள், உங்கள் அறிவை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். இது சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு உதவும்,"

மொழியின் பெருமையை விட்டுக்கொடுக்காது உரையாடினார்.

தமிழ், எமது அடையாளம் மற்றும் பெருமை. அதை நாங்கள் கற்றுக் கொண்டு, செம்மைப்படுத்த வேண்டும். இளையோர்கள் தமிழ் மொழியுடன் மேலும் உறவுகொண்டு, அதை வளர்க்க வேண்டும், தமிழ் இலக்கியம், அதன் நாகரிகம் மற்றும் பண்பாட்டுக்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. இளையோர்கள் இதனைப் படித்து, புரிந்துகொள்ள வேண்டும்," என்றார்.

பூரணம்மா பாட்டி, தனது அனுபவங்களைப் பகிர்வதன் மூலம், இளையோர்களுக்குப் பல பெறுமதியான அறிவுரைகளை வழங்குகினார். அவரது வாழ்க்கை, அனுபவங்கள், மற்றும் அவருடைய உணர்வுகள், இளையோர் முன்னேற்றத்திற்கு ஒரு பாதையை உருவாக்கும்.

"இலங்கையில், கல்வி மற்றும் விவசாயம் என்ற இரண்டு பங்களிப்புகள் மிகவும் முக்கியம். இவற்றை வளர்க்க, அனைவரும் கூடி முயற்சி செய்ய வேண்டும், எங்கள் பாரம்பரியங்களை மதிக்கவும், சமுதாயத்தை முன்னேற்றவும் வேண்டும், என் வாழ்வில் கற்ற பாடம், கடின உழைப்பும், கல்வியும் தான். இவை மட்டுமே ஒரு மனிதனுக்கு முன்னேற்றத்தை தரும், வாழ்க்கையில் நீங்கள் எதை எதிர்கொள்வீர்களோ, அதற்கு நீங்கள் தயாராக இருக்க வேண்டும். உங்கள் கனவுகளை மிகுந்த உற்சாகத்துடன் நோக்குங்கள்," என்ற சிறந்த அறிவுரையை வழங்கினார்.



# "வேறுபாடுகளை களைவோம்"



**இருளிலிருந்து வெளிச்சத்தை தேடிவந்த இலங்கை மக்கள் தற்போது புதிய எதிர்பார்ப்புக்களை சுமந்துக்கொண்டிருக்கின்றனர்**

இருள் நீங்கி ஒளிமயமாவதை அடையாளப்படுத்தும் முகமாக உலக வாழ் இந்து பக்தர்களால் தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படுகிறது. இந்நன்நாளில், வேறுபாடுகளை முழுமையாக இல்லாது செய்ய முன்வருவோம் என்று ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, தனது தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

சுதந்திரத்திற்கு பின்னர் இருளிலிருந்து வெளிச்சத்தை தேடிவந்த இலங்கை மக்கள் தற்போது புதிய எதிர்பார்ப்புக்களை சுமந்துக்கொண்டிருக்கின்றனர். இது மக்களின் பல வருட எதிர்பார்ப்பாகும். இத்தனை நாட்களாக இலங்கையை ஆட்சி செய்தவர்களால் முடக்கி வைக்கப்பட்டிருந்த பொதுமக்களின் எதிர்பார்ப்புக்களை மலரச் செய்யும் மாற்றத்துக்கான யுகத்தை நாம் ஆரம்பித்துள்ளோம்.

தீபாவளிக் கொண்டாட்டத்திற்கு பல காரணங்கள் உள்ளன. 14 வருட வனவாசத்தின் பின்னர் இராமர், இலட்சுமனர், சீதை பிராட்டி மீண்டும் அயோத்திக்கு வருகை தந்தமை மற்றும் கிருஷ்ண பகவான் நரகாசுரனை அழித்தமையை நினைவுகூறும் விதமாக இந்த பண்டிகை கொண்டாடப்படுகிறது.

அஞ்ஞானத்தின் இருளை போக்க மெய்ஞானத்தின் ஒளியினால் மட்டுமே முடியும் என்ற தொனியில் தீபங்களை ஏற்றி இலங்கையர்களாக புதிய புரட்சிக்கு வழிவகுப்பதாக இம்முறை தீபாவளி பண்டிகையை கொண்டாடுவோம் என மக்களிடம் கேட்டுகொள்கிறேன்.

கலாசார பல்வகைத்தன்மையின் அழகை மெருகூட்டும் வகையில், ஒருவருக்கொருவர் கௌரவம்,ஏற்றுக்கொள்ளல் மற்றும் சகோதரத்துவம் என்பவற்றுக்காக கரங்களை நீட்டுவோம்.

பிரித்து வலுவிழக்கச் செய்யப்பட்ட இலங்கை தேசத்தை பிளவுபடாமல் வலுவாக முன்னோக்கிக் கொண்டுச் செல்ல வேண்டிய காலம் உதயமாகியுள்ளது. அநீதி,வேறுபாடுகள், பிளவுபடுத்தல், வெறுப்புப் பேச்சுகள், வன்முறைகள் என்பதை முழுமையாக துடைத்தெறிந்து சமூகத்தில் வரப்பிரசாதங்களை பெற்றுக்கொள்வோர் மற்றும் வரப்பிரசாதங்கள் கிடைக்காதவர்கள் என்ற வேறுபாடுகளை முழுமையாக இல்லாது செய்ய முன்வருவோம்.

அவ்வறான, இரக்கம் கொண்ட ஒரு புதிய கலாசார இருப்பை உருவாக்க முன்வருமாறு அனைத்து மக்களுக்கும் அழைப்பு விடுக்கிறேன். இந்தத் தீபாவளியில், வளமான நாடு மற்றும் அழகான வாழ்க்கை என்ற நமது எதிர்பார்ப்பு நனவாக வேண்டுமானால், அதற்கான கலாசார, அரசியல் ரீதியான மனப்பாங்கு மாற்றமும் அவசியமாகும்.

தீபாவளி தினத்தில் அனைத்து வீடுகளிலும், நகரங்களிலும் ஏற்றப்படும் ஆயிரக்கணக்கிலான விளக்கு ஒளிகள் அனைவரினதும் மனங்களில் நட்புறவு மற்றும் ஞானத்தின் ஒளியை பரவச் செய்வதாக அமையட்டும் என பிரார்த்திப்பதோடு இலங்கைவாழ் இந்து பக்தர்களுக்கு தீபாவளி நல்வாழ்த்துகளைத் தெரிவிக்கிறேன்.

லெபனான்


## ஹிஸ்புல்லா அமைப்பின்
# புதிய தலைவர் நயீம் காஸிம்

ஹிஸ்புல்லா அமைப்பின் புதிய தலைவராக, மதகுரு நயீம் காஸிம் (வயது 71), செவ்வாய்க்கிழமை (29) அறிவிக்கப்பட்டார்.

இஸ்ரேலால் கடந்த மாதம் படுகொலை செய்யப்பட்ட ஹிஸ்புல்லா படையின் நீண்ட கால தலைவர் ஹஸன் நஸ்ரல்லாவுக்குப் பதிலாக அவர் அந்தப் பொறுப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து ஹிஸ்புல்லா அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"அமைப்பின் புதிய பொதுச் செயலராக நயீம்




காஸிமை ஷூரா கவுன்சில் (ஹிஸ்புல்லாக்களின் நிர்வாகக் குழு) தேர்ந்தெடுத்துள்ளது. முழு வெற்றியை அடையும்வரை, மறைந்த ஹஸன் நஸ்ரல்லாவின் கொள்கைகளை நயீம் காஸிம் முன்னெடுத்துச் செல்வார்" என்று, அந்த குறிப்பிடப்பட்டுள்ளது.

ஹிஸ்புல்லா அமைப்பை நிறுவியவர்களில் ஒருவராக, நயீம் காஸிமை இருந்தாலும், ஹஸன் நஸ்ரல்லா அளவுக்கு வசீகரமோ, பேச்சாற்றலோ இல்லாததால் அவர் அமைப்பின் தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவது குறித்து சந்தேகம் எழுப்பப்பட்டது.

இந்தச் சூழலில், ஹஸன் நஸ்ரல்லாவுக்குப் பதிலாக ஹிஸ்புல்லா அமைப்பின் புதிய தலைவராக நயீம் காஸிம் தேர்ந்தெடுக்கப்பட்டதை அந்த அமைப்பு தற்போது அதிகாரபூர்வமாக உறுதிப்படுத்தியுள்ளது.

சீனா

## அதிக குழந்தைகள் பெற்றுக்கொள்ளும்
# தம்பதிகளுக்கு புதிய சலுகைகள்



குழந்தை பிறப்பு சரிவை கட்டுப்படுத்தி, மக்கள் தொகையை அதிகரிக்க சீனா பல்வேறு சலுகைகளை அறிவித்துள்ளது.

உலகில் முதல் இடத்தில் இருந்து வந்த சீனாவில் மக்கள் தொகையை கட்டுப்படுத்த கடுமையான கட்டுப்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. ஒரு குழந்தை மற்றுமே பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற அறிவுறுத்தப்பட்டது. ஆனால், இந்தக் கட்டுப்பாட்டின் விளைவாக மக்கள் தொகை வேகமாக சரிந்தது.


இதனால், 2016ஆம் ஆண்டு அந்த கொள்கையை சீனா இரத்து செய்தது. தற்போது சீனாவில் 3 குழந்தைகள் பெற்றுக்கொள்ளளாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனாலும், அங்கு குழந்தை பிறப்பு விகிதம் தொடர்ந்து சரிந்து வருகிறது.

இந்நிலையில், குழந்தை பிறப்பு சரிவை கட்டுப்படுத்தி, மக்கள் தொகையை அதிகரிக்க சீனா பல்வேறு சலுகைகளை அறிவித்துள்ளது. சீன மந்திரிசபை இதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

அதிக குழந்தைகளை தம்பதிகளை ஊக்குவிக்கும்வகையில், அவர்களுக்கு 13 சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. குழந்தைப்பேறு மானியம் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. இதில் வீட்டு வசதி, கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவை தொடர்பான சலுகைகள், வருமானவரி சலுகைகள் இடம்பெற்றுள்ளன.

எகிப்து

## படகு கவிழ்ந்து
# 12 அகதிகள் பலி



எகிப்தில் இருந்து ஐரோப்பாவுக்கு, சட்டவிரோதமாக படகில் செல்ல முற்பட்ட 12 அகதிகள், படகு கவிழ்ந்து உயிரிழந்துள்ளனர்.

எகிப்தை சேர்ந்த 13 பேர் சட்டவிரோதமாக ஐரோப்பாவுக்குள் செல்ல திட்டமிட்டிருந்தனர். இதற்காக படகில் மத்திய தரைக்கடல் வழியாக திங்கட்கிழமை (28) பயணம் மேற்கொண்டனர்.

லிபியா அருகே 60 கிலோமீற்றர் தூரத்தில் சென்று கொண்டிருந்தபோது, எதிர்பாராத விதமாக படகு கடலில் கவிழ்ந்து விபத்தில் சிக்கியது. இந்த விபத்தில் படகில் பயணித்த 12 அகதிகள் உயிரிழந்தனர்.

தகவலறிந்து அங்கு வந்த லிபியா கடற்படையினர் உயிருக்கு ஆபத்தான நிலையில் ஒரு நபரை மீட்டு, வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

மேலும், உயிரிழந்த 12 அகதிகளின் உடல்களை மீட்டனர். இதுதொடர்பாக லிபியா அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

வத்திகான்

## வத்திக்கான் அமைப்பின்
# முதல் ஆண்டு அறிக்கை வெளியீடு



கத்தோலிக்க திருச்சபையின் மதகுருமார்களால், பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளானவர்களுக்கு இழப்பீடு மற்றும் பாதிரியார்களை நீக்குவதை எளிதாக்கும் உரிமையை அனுமதிக்க வேண்டும் என்று, வத்திக்கானின் குழந்தைகள் பாதுகாப்பு ஆணையம் தனது முதல் ஆண்டு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

செவ்வாய்க்கிழமை (29) வெளியிடப்பட்ட 50 பக்கங்களை கொண்ட அந்த அறிக்கையில், "பாலியல் துஷ்பிரயோகத்தின் நெருக்கடியைத் தீர்க்க தேவாலயத்தின் முயற்சிகள் பற்றிய முதல் உலகளாவிய மதிப்பீடாகும்.

"பல தசாப்தங்களாக, தேவாலயம் உலகெங்கிலும் உள்ள ஊழல்கள் மற்றும் அவர்களின் குற்றங்களை மூடிமறைத்தல், அதன் நம்பகத்தன்மையை சேதப்படுத்தியது மற்றும் குடியேற்றங்களில் நூற்றுக்கணக்கான மில்லியன் டொலர்களை செலவழித்தது" எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தெலுங்கானா

## கமலா ஹாரிஸ் வெற்றி பெற வேண்டி
# தெலுங்கானாவில் யாகம்



நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில், ஆளும் ஜனநாயக கட்சி சார்பில் துணை ஜனாதிபதியும், இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவருமான கமலா ஹாரிஸ், தேர்தலில் வெற்றிபெற வேண்டி, தெலுங்கானாவில் யாகம் நடைபெற்றது.

தெலுங்கானாவில் உள்ள பத்ராதி கோராகுடம் பகுதியில், சியாமலா கோபாலன் என்ற அமைப்பு சார்பில் தொடர்ந்து,11 நாட்கள் இந்த யாகம் நடத்தப்பட்டது.

10 நாட்களுக்கு முன்பு தொடங்கப்பட்ட இந்த யாகம், புதன்கிழமையுட் (30) நிறைவு பெற்றது.

கேரளா

## கோவில் திருவிழாவில் வெடி விபத்து:
# 150க்கும் மேற்பட்டோருக்கு காயம்



கேரள - காசர்கோடு அருகே கோவில் திருவிழாவில், செவ்வாய்க்கிழமை (29) அதிகாலை ஏற்பட்ட வெடி விபத்தில் 150க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இதில், சிலரது நிலை கவலைக்கிடமாக இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

அஞ்சூத்தம்பலம் வீரர்கா கோவிலின் திருவிழாவை முன்னிட்டு, பட்டாசுகள் கோவில் அருகே உள்ள குடோனில் வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், குடோனில் வைக்கப்பட்டிருந்த வைக்கப்பட்டிருந்த பட்டாசுகள் தீப்பற்றி வெடித்து சிதறின. வாணவேடிக்கையின் போது பட்டாசுகளில் இருந்து வெளியான தீப்பொறி, குடோனில் இருந்த பட்டாசுகள் மீது விழுந்த காரணத்தால் இந்த தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

இதனால் திருவிழாவை காண வந்திருந்த மக்களில் 150க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

விபத்தில் காயமடைந்தவர்களில் 8 பேருக்கு 80 சதவீத தீக்காயம் ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவத்தை அடுத்து கோவில் திருவிழா தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

## பந்துவீச்சாளர்களின் தரவரிசையில்
# முதலாமிடத்துக்கு முன்னேறிய றபடா

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் முதலாமிடத்துக்கு தென்னாபிரிக்காவின் ககிஸோ றபாடா முன்னேறியுள்ளார்.

பங்களாதேஷுக்கெதிரான முதலாவது டெஸ்டில் 9 விக்கெட்டுகளைக் கைப்பற்றியதைத் தொடர்ந்தே நான்காமிடத்திலிருந்து மூன்று இடங்கள் முன்னேறி முதலாமிடத்தை றபாடா அடைந்துள்ளார்.

இதேவேளை இங்கிலாந்துக்கெதிரான மூன்றாவது டெஸ்டில் 9 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய பாகிஸ்தான் நொமன் அலி 17ஆம் இடத்திலிருந்து எட்டு இடங்கள் முன்னேறி ஒன்பதாமிடத்தை யடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

ககிஸோ றபாடா, 2. ஜொஷ் ஹேசில்வூட், 3. ஜஸ்பிரிட் பும்ரா, 4. இரவிச்சந்திரன் அஷ்வின், 5. பற் கமின்ஸ் 6. நேதன் லையன், பிரபாத் ஜெயசூரிய, 8. இரவீந்திர ஜடேஜா, 9. நொமன் அலி, 10. மற் ஹென்றி.

இந்நிலையில் நியூசிலாந்துக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் 107 ஓட்டங்களைப் பெற்ற இந்தியாவின் யஷஸ்வி ஜைஸ்வால், துடுப்பாட்டவீரர்களின் தரவரிசையில் நான்காமிடத்திலிருந்து ஒரிடம் முன்னேறி மூன்றாமிடத்தையடைந்துள்ளார்.

இதேவேளை இங்கிலாந்துக்கெதிரான மூன்றாவது டெஸ்டில் 134 ஓட்டங்களைப் பெற்ற பாகிஸ்தானின் சௌட் ஷகீல் 27ஆம் இடத்திலிருந்து 20 இடங்கள் முன்னேறி ஏழாமிடத்தையடைந்துள்ளார்.

இது தவிர, இந்தியாவுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் 74 ஓட்டங்களைப் பெற்ற நியூசிலாந்தின் றஷின் றவீந்திர, 18ஆம் இடத்திலிருந்து எட்டு இடங்கள் முன்னேறி 10ஆம் இடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

ஜோ றூட், 2. கேன் வில்லியம்சன், 3. யஷஸ்வி ஜைஸ்வால், 4. ஹரி ப்றூக், 5. ஸ்டீவன் ஸ்மித், 6. உஸ்மான் கவாஜா, 7. சௌட் ஷகீல், 8. மர்னுஸ் லபுஷைன், 9. கமிந்து மென்டிஸ், 10. றஷின் றவீந்திர.

இந்நிலையில் தென்னாபிரிக்காவுக்கெதிரான முதலாவது டெஸ்டில் 110 ஓட்டங்களைப் பெற்றதோடு 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய பங்களாதேஷின் மெஹிடி ஹஸன் மிராஸ், சகலதுறைவீரர்களுக்கான தரவரிசையில் ஐந்தாமிடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி மூன்றாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

இரவீந்திர ஜடேஜா, 2. இரவிச்சந்திரன் அஷ்வின், 3. மெஹிடி ஹஸன் மிராஸ், 4. ஷகிப் அல் ஹஸன், 5. ஜேஸன் ஹோல்டர்.



# அவுஸ்திரேலியப் பயிற்றுவிப்பாளர் மக்டொனால்டின் ஒப்பந்தம் நீடிப்பு

அவுஸ்திரேலியாவின் தலைமைப் பயிற்றுவிப்பாளர் அன்றூ மக்டொனால்டின் ஒப்பந்தமானது 2027ஆம் ஆண்டு இறுதி வரையில் நீடிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் 2022ஆம் ஆண்டு நான்கு ஆண்டுகள் ஒப்பந்தமொன்றில் ஆரம்பத்தில் நியமிக்கப்பட்ட மக்டொனால்ட், சர்வதேச கிரிக்கெட் சபையின் அடுத்த உலகக் கிண்ணத் தொடர், உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் வரையில் கடமையாற்றவுள்ளார்.



## மேற்கிந்தியத் தீவுகள் எதிர் இங்கிலாந்து:
# தொடர் இன்று ஆரம்பிக்கிறது



மேற்கிந்தியத் தீவுகள், இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரானது அன்டிகுவாவில் இன்றிரவு 11.30 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கவுள்ளது.

ஜொஸ் பட்லர் இல்லாத நிலையில் இங்கிலாந்தின் அணித்தலைவராக கடமையாற்றப் போகும் லியம் லிவிங்ஸ்டோனுக்கு தனது மீள்வருகைக்கு அடுத்த இந்த தொடரில் நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. ஏனெனில் வில் ஜக்ஸ், ஜேக்கப் பெதெல், டான் மூஸ்லி என இளம் சகலதுறைவீரர்கள் களத்தில் போட்டிக்காக காணப்படுகின்றனர்.

தவிர சஹிப் மஹ்மூட்டின் மீள்வருகையில் தன்னை நிரூபிக்க எதிர்பார்ப்பார் என்பதோடு மிஷெல் பெப்பர், ஜோர்டான் கொக்ஸ் ஜாஃபர் சோஹன், ஜோன் டேர்னர் ஆகியோருக்கும் ஜேமி ஒவெர்ட்ட, சாம் கர்ரனுக்கு தம்மை நிரூபித்துக் கொள்ள வாய்ப்பாக இத்தொடர் அமைகின்றது.

மறுப்பக்கமாக இலங்கைக்கெதிரான இறுதிப் போட்டியில் சதம் பெற்ற எவின் லூயிஸ் தொடர்ந்து பெறுபேறுகளை வெளிப்படுத்துவதன் மூலம் அணியில் நீடிக்க முடியும் என்பதுடன் மீள்வருகை புரிந்துள்ள ஷிம்ரோன் ஹெட்மயருக்கும் தன்னை நிரூபிக்க இத்தொடர் வாய்ப்பாகக் காணப்படுகிறது.

# கிழக்கின் முதல் மகளிர் கிரிக்கெட் நடுவராக எம்மா க்ளோரியா



**கனகராசா சரவணன்**

மட்டக்களப்பு வின்சென்ட் மகளிர் உயர்தர பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியராக கடமையாற்றிவரும் செல்வி எம்மா க்ளோரியாவை கிழக்கின் முதல் மகளிர் கிரிக்கெட் நடுவராக இலங்கை கிரிக்கெட் சபை தெரிவு செய்துள்ளது.

கிழக்கு மாகாண பாடசாலை களுக்கிடையிலான 16 வயதுக்குட்பட்ட மகளிர் கிரிக்கெட் தொடர் அண்மையில் நடைபெற்றபோது நடுவராக எம்மா க்ளோரியா கடமையாற்றினார்.

இவர் இலங்கை கிரிக்கெட் நடுவர் சங்க மட்டக்களப்பு மாவட்ட கிளையின் நடுவர்களுள் ஒருவராவார்.

இவர், வலய, மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்ட போட்டிகளில் கலந்து கொண்டு மட்டக்களப்பு மண்ணுக்கு பெருமை சேர்த்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 31, ஒக்டோபர் 2024, இல.08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.